MISSION PRESS 1840
PONDICHERRY

# சர்வவியாபி

SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-113)

| 11-08-2019 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | விகாரி வருடம் ஆடி 26 | வருட சந்தா ₹ 150<br>தனிப்பிரதி ₹ 6 |
|---|---|---|---|---|

| புத்தகம் 56 | இதழ் 30<br>பக்கம்-12 | e-mail:missionpress48@gmail.com<br>e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/<br>2334360 | ஆசிரியர்: அருட்திரு C. அந்தோனி ரோச் |
|---|---|---|---|---|


## கொடுங்கள், அதுவே வாழ்வின் இரகசியம் - திருத்தந்தை



சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல், சேவையாற்றுதல், அக்கறை காட்டுதல் போன்றவற்றால், மற்றவருக்கு உங்களையே கொடுங்கள், இதுவே உங்களுக்கு அக விடுதலையளிக்கும், மற்றும் உலகை வளப்படுத்தும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஆயிரக்கணக்கான ஐரோப்பிய இளையோரிடம் கூறினார். ஆகஸ்ட் 3, சனிக்கிழமையன்று, திருத்தந்தை ஆறாம் பவுல் அரங்கத்தில் தன்னை சந்தித்த, Euromoot எனப்படும் ஐரோப்பிய சாரணர் இயக்க கூட்டமைப்பின், ஏறத்தாழ ஐந்தாயிரம் உறுப்பினர்களுக்கு உரையாற்றி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், "கொடுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும் (லூக்.6:38)" என்ற இயேசுவின் திருச்சொற்களை மையப்படுத்தி பேசினார்.

இருபது ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த 16 வயதுக்கும் 21 வயதுக்கும் உட்பட்ட சாரணர் படை உறுப்பினர்கள் மற்றும் வழிநடத்துனர்கள் என, ஏறத்தாழ ஐந்தாயிரம் பேர், ஜூலை 27, சனிக்கிழமை முதல் ஆகஸ்ட் 3, சனிக்கிழமை முடிய உரோம் நகரில் மாநாடு நடத்தினர். இம்மாநாட்டின் நிறைவாக, அவர்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களையும் சந்தித்து ஆசீர் பெற்றனர்.

ஐரோப்பாவில் பல்வேறு காலக்கட்டங்களில் வாழ்ந்த தர்சு நகர் பவுல், நோர்சியா நகர் பெனடிக்ட், சிரில், மெத்தோடியஸ், அசிசி நகர் பிரான்சிஸ், சியன்னா கத்ரின் ஆகிய புனிதர்கள் பற்றி எடுத்துரைத்த திருத்தந்தை, இப்புனிதர்கள், தங்களின் மாபெரும் கனவுகளை நனவாக்கும் பாதையில், இறைவனில் நம்பிக்கை வைத்து, சவால்களை எதிர்கொண்டனர் என்று கூறினார். நூற்றாண்டுகள் கடந்த பின்னரும், இப்புனிதர்கள் உங்களுக்கும் நன்மை செய்துள்ளனர், அவர்கள் தங்களுக்கென எதையும் வைத்துக் கொள்ளாமல், மற்றவருக்குத் தங்கள் வாழ்வையே கையளித்தனர், இந்தக் காரணத்திற்காகவே, கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் என்பதை மையப்படுத்தி உங்களிடம் பேச விழைகிறேன் என்று கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ். கொடுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்.

உங்கள் கரங்களைப் பாருங்கள், அவை கட்டியெழுப்புவதற்கும், சேவையாற்றுவதற்கும், கொடுப்பதற்குமென படைக்கப்பட்டுள்ளன என்றுரைத்த திருத்தந்தை, கொடுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும் என்பது, படைப்பிற்கும் பொருந்தும், நாம் படைப்பை இன்று பராமரித்தால், நாளை நமக்கென ஓர் இல்லமும் இருக்கும் என்றும் தெரிவித்தார்.

படைப்பு, ஒரு திறந்த நூல், பிறரைச் சந்திக்கவும், குழு ஒன்றிப்பை உருவாக்கவும் இவ்வுலகில் நாம் இருக்கின்றோம் என்பதை, படைப்பு நமக்குப் போதிக்கின்றது என்று கூறினார், திருத்தந்தை. நீங்கள் ஒவ்வொருவரும் தனித்துவமிக்கவர்கள், இந்த உலகில் நீங்கள் எதைக் கொடுப்பதற்கு அழைக்கப்பட்டுள்ளீர்களோ அதை வேறு எவராலும் உலகிற்கு அளிக்க முடியாது, நீங்கள் கடவுளின் கண்களுக்கு விலைமதிப்பற்றவர்கள் என்பதை ஒருபோதும் மறவாதீர்கள் என்றும், இளையோரிடம் திருத்தந்தை கூறினார்.

சுதந்திரம் என்பது, தொலைபேசியுடன் அறைக்குள் கதவுகளை மூடிக்கொள்வதோ, அல்லது எதார்த்தமான வாழ்வுநிலையை விட்டு தப்பிச் செல்வதோ அல்ல, மாறாக வாழ்வுப் பாதையில் மற்றவரோடு இணைந்து செல்கையில், படிப்படியாக கிடைப்பதாகும் என்றும், வாழ்வில் ஆரம்பம் என்பது கொண்டிருப்பது அல்ல, மாறாக, கொடுப்பது என்றும், திருத்தந்தை கூறினார். புதுப்பிக்கப்பட்ட ஐரோப்பாவிற்கு வாழ்வு தருகின்ற ஒப்புரவாக்கப்பட்ட மற்றும் ஒருங்கிணைந்த சமுதாயங்களை, உயிர்த்துடிப்புடன் சமைப்பவர்களாக வாழுங்கள் என்று, இந்த சாரணர் இயக்க இளையோரை, இறுதியில் ஊக்கப்படுத்திய திருத்தந்தை அவர்களின் பணிகளையும் பாராட்டினார். ●

---

**அன்னை கன்னிமரியாவின் விண்ணேற்பு பெருவிழா!**





**நம் பாரத நாட்டின் 73-ஆவது சுதந்திர தின விழா!!**

***சர்வவியாபி எழுத்தாளர், வாசகர்கள் அனைவருக்கும் நல் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்.***

*-சர்வவியாபி.*

ஆசிரியர் பேனா...

# இளைஞனே விழித்தெழு!

சமுதாயத்தின் உயிர் இயக்கமாக, நாடித் துடிப்பாக இருப்பவர்கள் இளைஞர்கள். இளையோரின் வாழ்வும், செயல்பாடும் ஒரு சமுதாயம் நலமான சமுதாயமா, நோயுற்ற சமுதாயமா என்பதை வெளிப்படுத்தும். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடந்த ஏப்ரல் 2-ஆம் தேதி வெளியிட்ட 'Christus vivit' 'கிறிஸ்து வாழ்கிறார்' என்ற மடலில் இளைஞரின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். இளையோர் சமுதாயத்தின் 'இன்று' என்று குறிப்பிடுகிறார். சமுதாயத்தின் நாடித் துடிப்பான இளைஞனே சமுதாயத்தை வாழ்விக்க விழித்தெழு.

அன்றாடச் செய்தியாக வரும் மனித உரிமை மீறல்களும் (உன்னாவ் பாலியல், வன்கொடுமை தினமணி 2.8.19, எங்கே மன சாட்சியின் குரல்) வன்புணர் நிகழ்வுகளும், கொலைகளும், கொள்ளைகளும், அதிகார அத்துமீறல்களும் அடக்கு முறைச் செயல்களும், உன்னை பாதிக்கவில்லையா? நீ உணரவில்லையா? அல்லது பசப்பு வார்த்தைகளுக்கும் கவர்ச்சிகளுக்கும் நீ அடிமையாகி அடங்கி விட்டாயோ? 'பத்தோடு பதினொன்று அத்தோடு நானொன்று' என்று நீயும் அப்படியே வாழ்ந்துவிடலாம் என்று தீர்மானித்து விட்டாயா? அப்படி தீர்மானிக்க வேண்டாம். சமுதாயத்திலிருந்து பிரிந்து தனித்து வாழ்ந்துவிடலாம் என்று கனவு காண்கிறாயா? இளைஞனே உன் கண்ணையும் காதையும் திறந்து, நடப்பதைப் பார் கேட்பதைச் சீர்தூக்கிப் பார். அப்போது உனக்குத் தெரியும் எந்த அளவுக்கு சமுதாயம் ஒழுக்கம் கெட்டு, சீர்கெட்டு சின்னாபின்னமாகிக் கிடக்கிறது என்று. உன்னை விழித்தெழச் செய்ய தூண்டும் வள்ளுவன் குறளைக் கேள்.

***"ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்***
***ஏதம் படுபாக் கறிந்து"*** (குறள் 136)

ஒழுக்கம் தவறுவதால் குற்றங்கள் பெருகும்; அதனை அறிந்து தெளிந்த சான்றோர், ஒழுக்கத்திலிருந்து ஒருபோதும் தவறமாட்டார். நீ ஒரு **சான்றோனாக விழித்தெழு.** பொறாமை உடையவனிடம் செல்வ வளர்ச்சி இருக்காது; அதுபோல ஒழுக்கம் இல்லாதவனிடம் எத்தகைய உயர்வும் இருக்காது.

***"அழுக்காறு உடையான்கண் ஆக்கப்போன்று இல்லை***
***ஒழுக்கம் இலான்கண் உயர்"*** (குறள் 135).

நீ உயர்ந்தவனாய் சிறப்புற உயிரைவிட உயர்வாக ஒழுக்கத்தை காத்திடு; நீ உலகின் உப்பாகவும் ஒளியாகவும் இருக்க அழைக்கப்படுவதை உணர்ந்து செயல்படு "உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்க" (மத்.5:16)

அறிவியலும், கண்டுபிடிப்புகளும் மனிதரின் ஆற்றலை வெளிப்படுத்துகின்றன. அறிவிலும், ஆற்றலிலும் நம்பிக்கைக் கொண்ட சமுதாயம், அனைத்திற்கும் தொடக்கமும் ஊற்றுமான கடவுளை புறம் தள்ளிவிட்டது. 'காசேதான் கடவுளடா' என்ற மாயையிலே சிக்கித் தவிக்காமல் **'உண்மை' யிலே வாழ்வு பெற விழித்தெழு.** வாழ்வு பெற இயேசுவிடம் வழிகேட்ட இளைஞன் தன் செல்வத்தை இழக்க மனம் இல்லாமல் வருத்தத்தோடு திரும்பியதைப்போல நீயும் இருந்துவிடாதே (மத்.19:16-24). **உள்ளத்தில் உண்மையை உணர்ந்து வாழ்வு பெற விழித்தெழ** விருப்பம் கொள்). "ஒதுக்க வேண்டியதை ஒதுக்கி ஏற்க வேண்டியதை ஏற்று" வாழ்ந்த ஸ்ரீஇராமகிருஷ்ணர் கூறும் அறிவுரையைக் கேள். "கட்டுகளை எல்லாம் விலக்க வேண்டியதுதானே நிர்வாணம்." "நாம் எல்லோரும் ஏதோ அகவாழ்வில் அழுந்திய ஆத்ம ஞானிகள்போல, புறத்தோற்றத்தில் என்ன இருக்கிறது? சடங்கில் என்ன இருக்கிறது? என்றெல்லாம் நீட்டி முழங்குகிறோம். இப்படியே பேசி பேசியே அகம்- புறம் இரண்டையும் சுத்தமாக்கிக் கொள்ளாமல் காலம் தள்ளுகிறோம்.

***"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க***
***நெறிநின்றார் நீடுவாழ் வார்"*** - (குறள் 6)

இறைவனில் நம்பிக்கைக்கொண்டு உன் அறிவையும் ஆற்றலையும் சமுதாயத்தின் நலனுக்காகப் பயன்படுத்து.

'ஜனநாயகம்' என்பதற்கு தம் விருப்பம்போல் அர்த்தம் கற்பித்து, 'மக்களை சந்தைப்படும் பொருளாக' கருதிச் செயல்படும் **மக்கள் பிரதிநிதிகளிடம் இருந்து சமுதாயத்தைக் காத்திட இளைஞனே விழித்தெழு** "செயல் திறனற்ற வேடிக்கைப் பார்க்கும் பார்வையாளர்களாக, அரசாங்கத்தின் பயனாளிகளாக, ஆட்சியாளரிடம் மனுகொடுக்கும் மனுதாரராக இருக்கும், வாக்களிக்கும் மக்களை தன்மானம் காக்கும் வலிமைப் படைத்தோரை மாற்ற இளைஞனே **அரசியல் விழிப்புகொள்.** மக்களாட்சியில் சமூக நலனில் தான் தன்நலம் அடங்கியுள்ளது என்ற புரிதலைக் கொண்டு பொது நலம் காத்திட அரசியல்வாதிகளுக்கு அறிவுறுத்து. (க.பழனிதுரை மக்களாட்சி குறித்த கல்வி தேவை, தினமணி 2.8.2019) சுதந்திரத்திற்காக பாடுபட்ட வீரர்களும், சுதந்திர இந்தியாவை உருவாக்க உழைத்தவர்களும் அரசியலிலே ஈடுபட்டபோது தங்கள் பணத்தையும், சொத்தையும் நாட்டிற்காக தியாகம் செய்தார்கள்; அந்த உத்தமர்களை மறந்து விடாதே. நாட்டிற்கு சேவை செய்கிறேன் என்று சொல்லும், இன்றைய மக்கள் பிரதிநிதிகள் சம்பளம் பெறுவது என்ன நீதி? மக்கள் வாடும்போது சம்பளத்தை விரும்பிய போதெல்லாம் உயர்த்திக் கொள்வது நியாயமா? 'சேவை' என்பதை கொச்சைப்படுத்தி, நம் சுதந்திர வீரர்களை, தியாகிகளை அவமதிக்க வேண்டாம் என்று அவர்களுக்கு சொல். "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்" (சிலப்பதிகாரம்) என்பதை அவர்களுக்கு நினைவூட்டு.

"யானை பலத்தோடும், மான்வேக ஓட்டமும், ஆண்மை மிக ஏற்றமும்"கொண்ட சிம்சோன் என்ற சூர்யாவைப் போல் **நாட்டைக் காத்திட இளைஞனே விழித்தெழு** எரிநட்சத்திரமாய், தான் வீழ்ந்தாலும் தன் எதிரிகளை இறுதி மூச்சில் வீழ்த்திவிட்ட மாவீரன்" (அமல்ராஜ் - மீட்பின் காவியம்) சிம்சோனைபோல் நாட்டையும் சமுதாயத்தையும் காத்திட புறப்படு. "இயற்கை மீதே ஆளுகை கொண்ட இறைவனை நம்பினால் போரினிலே உயர்கை நமதாகுமே" என்ற உறுதியோடு வெறும் முந்நூறு (ஆட்கள்) ஆனாலும் - ஆண்டவரின் திருவாக்கினிலே நம்பிக்கை பெற்றவராய் (அமல்ராஜ்-'மீட்பின் காவியம்) செயல்பட்ட கிதியோனைப் போல நாடு விடுதலைப் பெற துணிந்து செயல்படு. போர் கருவிகளில் நம்பிக்கைக் கொள்ளாமல் இறைவனிலே நம்பிக்கை வைத்து கோலியாத்தை வீழ்த்திய சிறுவன் தாவீது போல எதிரியை வெற்றிகொள். சமூகப்பணியாற்றிட உன் வலிமையோடு ஞானம் வேண்டும். அதனை சாலமோன் அரசன் இறைவனிடம் வரமாய் கேட்டதுபோல நீ கேட்டு பெற்று செயல்படு.

Bro! என்று நண்பனை விளிக்கும் இளைஞனே, உன் நண்பனைத் தேர்வு செய்வதில் **விழிப்பாய் இரு**. ஆகஸ்டு முதல் ஞாயிறு நண்பர்கள் நாளாகக் கொண்டாடினாய். நண்பர்களின் வகை சொல்கிறேன் தெரிந்துகொள். பனை மரம் போல எந்த உதவியையும் எதிர்பார்க்காமல் உதவுபவர்கள் முதல் வகை. அவ்வப்போது உதவியைப் பெற்றுக்கொண்டு உனக்கு உதவுபவர்கள் இரண்டாம் வகை. இவர்கள் தென்னையை போன்றவர்கள். மூன்றாம் வகை நண்பர்கள் உன்னிடம் எப்போதும் உதவியை நாடுவார்கள். இவர்கள் வாழையைப் போன்றவர். நீ நம்பி சொன்ன உண்மையை மற்றவரிடம் சொல்பவரை நம்பாதே. நீ தவறு செய்யும் போது முகத்துக்கு நேராக சுட்டிக் காட்டுபவனை நம்பு; புறம் பேசுபவனை நம்பாதே. முகத்துதி பாடுபவரை நம்பாதே, (தினமணி, 2.8.19 பா. போற்றிராஜா, உங்களின் நல்ல நண்பர் யார்) இயேசுவை உன் நண்பராக ஏற்றுக் கொள். அவர் உன்னை தன் நண்பன் என்று அழைக்கிறார். இயேசுவின் நண்பனாக மாறி சமுதாயம் வாழ்வு பெற இளைஞனே விழித்தெழு "நீங்கள் கனிதரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன்." (யோவான்.15:12-16)●




ஆண்டின் பொதுக்காலம் 20ம் ஞாயிறு (18-08-2019)

# சவால்களை சந்திப்போம்

அருள்திரு. P. லூர்து ஜெயராஜ்,
துணை முதல்வர், பெத்தி செமினேர் மேல்நிலைப் பள்ளி,
புதுவை.



அலைகள் இல்லாமல் கடல் இல்லை, உளிகள் இல்லாமல் சிற்பம் இல்லை. அதேபோல் சவால்கள் இல்லாமல் கிறிஸ்தவம் இல்லை. இன்றைய ஞாயிறு இறைவார்த்தை வழிபாடு நம்முடைய வாழ்க்கையின் சவால்களுக்கு மத்தியிலும் நாம் எந்த அளவுக்கு கிறிஸ்துவுக்கு சான்று பகிர்கின்றோம் என்ற அழைப்பை முன்வைக்கின்றது. திரு முழுக்கு பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவரின் வாழ்க்கையிலும் நன்மைக்கும்-தீமைக்கும், நீதிக்கும் - அநீதிக்கும், பாவத்திற்கும் - புனிதத்திற்கும் இடையே போராட்டம் நடந்து கொண்டேதான் இருக்கிறது. இது ஒரு சவால். இந்த சவால் நிறைந்த கிறிஸ்தவ விசுவாச வாழ்வை புனிதமாக்க நாம் பயணிக்க வேண்டும். எனவே கிறிஸ்துவ வாழ்வு என்பது சவால் நிறைந்ததா? என்ற கேள்வி நம்மிலே எழலாம். ஆம், சவால் நிறைந்ததுதான். அந்த சவாலை மனந்தளராது ஏற்று வாழும் போது கடவுள் நம்முடன் இருப்பார், உற்சாக மூட்டுவார், துன்பங்களிலிருந்து விடுவிப்பார் என்பதை இன்றைய வாசகங்கள் நமக்கு உறுதிபடுத்துகின்றன.

**தீயை மூட்டவே வந்தேன்:** நெருப்பு பல விதங்களில் நமக்கு பயன்படுகின்றது. ஒளியை ஏற்றுவதற்கு, உணவு சமைப்பதற்கு நெருப்பு உதவுகின்றது. குளிர்காலத்தில் குளிர்காய்வது இதமான அனுபவம். தேவையில்லாதவற்றை சுட்டெரிப்பதற்கும் நெருப்பு பயன்படுகின்றது. அதே நேரத்தில் நெருப்பு அழிவுக்கும் காரணமாகலாம்.கலவரங்கள் ஏற்படும் போது வாகனங்களுக்கும் வீடுகளுக்கும் ஊர்களுக்கும் தீ வைத்து அழிக்கின்ற செயல்கள் இப்போதும் நடந்து வருவது ஒரு கசப்பான அனுபவம். இயற்கையாகவோ மனிதரின் கவனக்குறைவாலோ காடுகளில் தீ எரிந்து பெரும் அழிவு ஏற்படுவதும் உண்டு. இவ்வாறு தீயானது ஆக்கவும் அழிக்கவும் பயன்படுகிறது. இன்றைய நற்செய்தியில் இயேசு "மண்ணுலகில் தீயை மூட்டவே வந்தேன்" என்கிறார். இங்கு இயேசு தீயை அழிப்பதற்கல்ல, ஆக்குவதற்கு, உருவாக்கு வதற்கு பயன்படுத்துகின்றார். எனவே இயேசு குறிப்பிடும் 'தீ' எது என்பதை மத்.3:11 ன் பின்னணியில் புரிந்து கொள்வது சிறந்தது. திருமுழுக்கு யோவான், "நான் தண்ணீரால் திருமுழுக்கு கொடுக்கிறேன், எனக்குப் பின் ஒருவர் வருகிறார் அவர் தூய ஆவி என்னும் நெருப்பால் உங்களுக்கு திருமுழுக்கு கொடுப்பார்" என்கிறார். மேலும் இயேசு இறந்து உயிர்த்த பிறகு திருத்தூதர்கள் யூதர்களுக்கு பயந்து அஞ்சி, நடுங்கி அறையில் பதுங்கி கிடக்கிறார்கள். அப்போது, "நெருப்பு போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்ததை அவர்கள் கண்டார்கள். அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர்" (திப.2:3-4) என்று அறிகின்றோம். ஆக, மண்ணுலகில் தீயை மூட்ட வந்தேன் என இயேசு குறிப்பிடுவது தூய ஆவி என்ற தீயைக் குறித்தே. திருமுழுக்கின் மூலம் நாம் ஒவ்வொருவரும் தூய ஆவியை பெற்றிருக்கின்றோம். இந்த தூய ஆவியானவர் நமது பாவங்களிலிருந்து நம்மைத் தூய்மைபடுத்தி விடுதலை வாழ்வுக்கு அழைத்து செல்கின்றார். எனவே நாம் பழைய வாழ்வை விடுத்து புதிய வாழ்வுக்கு கடந்து செல்ல வேண்டும். சவால் நிறைந்த கிறிஸ்துவ விசுவாச வாழ்வை புனிதமாக்க பயணிக்க வேண்டும்.

**பிளவு உண்டாக்கவே வந்தேன்:** இயேசுவை அமைதியின் அரசர் என்றும் சமாதானத் தூதுவர் என்றும் நாம் போற்றுகிறோம். அவர் பிறந்த போது விண்ணகத் தூதர்கள் ஒருங்கிணைந்து, "உலகில் கடவுளுக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக" (லூக்.2:14) எனப்பாடி வாழ்த்தினார்கள். இயேசு இவ்வுலகை விட்டு பிரிவதற்கு முன்னால் தம் சீடரை நோக்கி " அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன் என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன்" ( யோவா.14:17) என வாக்களித்தார். உயிர்த்தெழுந்த பிறகு இயேசு தம் சீடர்களை சந்தித்தபோதெல்லாம் "உங்களுக்கு அமைதி உண்டாகுக" (லூக்.24:36) என வாழ்த்தினார். இவ்வாறு அமைதியைப் போற்றிய இயேசுவா இன்றைய நற்செய்தியில் "பிளவு உண்டாக்கவே வந்தேன்" எனக் கூறுகிறார்? என்ற கேள்வி நம் எல்லோர் மனதிலும் எழலாம். இயேசு கொணர்ந்த பிளவு பற்றி இயேசுவின் குழந்தைப் பருவத்தின் போதே அறிவிக்கப்பட்டது. குழந்தை யேசுவை கோவிலில் அர்ப்பணிக்கப்பட்டபோதே சிமியோன் என்னும் இறைவாக்கினர் இயேசு மக்களிடையே பிளவு கொணர்வார் என்று முன்னறிவித்தார். "இதோ இக்குழந்தை இஸ்ரயேல் மக்களின் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும்" (லூக்.2:34). இயேசு வாழ்ந்தபோது சமுதாயத்தில் குடும்ப உணர்வு மிக ஆழமாக வேரூன்றியிருந்தது. துன்ப துயரங்கள் ஏற்பட்டாலும் ஒருவரையொருவர் விட்டு பிரியாமல் நெருங்கிய குடும்ப உணர்வோடு வாழ்ந்தார்கள். அவ்வாறு ஒற்றுமையாக வாழ்ந்த குடும்பங்களிலும் இயேசுவின் பொருட்டு பிளவு ஏற்பட்டது. அதாவது ஒரு சிலர் இயேசுவை ஏற்றார்கள். ஒரு சிலர் எதிர்த்தார்கள். இது தொடக்க காலத் திருச்சபையில் தெளிவாகத் தெரிந்தது இதைத்தான் லூக்கா நற்செய்தியாளர் பதிவு செய்துள்ளார். இன்றைய உலகிலும் இயேசுவை ஏற்போரும், எதிர்ப்போரும் உள்ளனர். இறைவார்த்தையின் மதிப்பீடுகளின்படி நடப்போரும் அவருடைய போதனைகளை புறக்கணிப் போரும் உள்ளனர். கடவுளையும் மனிதரையும் ஒருங் கிணைக்கின்ற இயேசுவை நம் வாழ்க்கையில் ஏற்கிறோமா? அல்லது எதிர்க்கிறோமா?

**சவால்களை சந்திப்போம்:** நாம் இரண்டு வகையான சவால்களை சந்திக்கின்றோம். ஒன்று வெளியிலிருந்து அதாவது, குடும்பத்தில், சமுதாயத்தில், அரசியல் தலைவர்கள் இவர்களிடமிருந்து. இரண்டாவது ஒவ்வொருவரும் தனக்குள்ளே சந்திக்கும் சவால்கள். ஒருபக்கம் குடும்பத்தில் கணவன் பக்தியில், விசுவாசத்தில் நல்ல பண்பில் சிறந்து விளங்குவார். ஆனால் மனைவியோ கடவுள்மேல் விசுவாசம் கொள்ளாமல் ஒழுக்கம் இல்லாமல் வாழ்வார். மறுபக்கம் மனைவி விசுவாசத்தில், ஒழுக்கத்தில் நற்பண்பில் சிறந்து விளங்குவார். கணவன் தாறுமாறான வாழ்க்கை வாழ்ந்துகொண்டு பொறுப்பில்லாமல் திரிவார். இன்னொரு பக்கம் பிள்ளைகள் விசுவாசத்தில், ஒழுக்கத்தில் சிறந்து விளங்குவார்கள். பெற்றோர்கள் பிள்ளைகள் மேல் அக்கறை இல்லாமல் இருப்பார்கள். இது குடும்ப பத்திற்குள்ளான பிளவு. நாம் கிறிஸ்தவர்கள், சிறுபான்மையினர் என்பதால் சமுதாயத்தால் அரசியல் தலைவர்களால் நமக்கு இழைக்கப்படும் துன்பங்கள். காதல் திருமணத் தால் நம்முடைய கிறிஸ்துவ சமயத்தையே இழந்து நிற்கின்ற அவல நிலை. இத்தகைய பிளவுகள்தான் நாம் வெளியிலிருந்து சந்திக்கின்ற சவால். இரண்டாவதாக, இன்றைய இரண்டாம் வாசகத்தில் தூய பவுலடிகளார் நம் ஒவ்வொருவரும் தனக்குள்ளே ஏற்படும் சவால்களை ஏற்று எப்படி வாழ்வது என்பதை விளக்குகின்ற விதமாக கிறிஸ்துவ விசுவாச வாழ்வை ஓர் ஓட்டப் பந்தயத்திற்கு ஒப்பிடுகிறார். ஓட்டப்பந்தய வீரர்கள் ஓடும்போது தன்னுடன் எந்த சுமையையும் கொண்டு செல்வதில்லை. சுமைகளிருந்தால் பந்தயத்தில் ஓடுவது சிரமம். அதுபோல கிறிஸ்துவ விசுவாச வாழ்வு என்னும் பந்தயத்தில் ஓடும்போது பாவம் என்னும் சுமைகளைகளைந்து ஓட வேண்டும். இவைகள்தான் போட்டி, பொறாமை, பொய்மை, அகந்தை கோபம், இச்சைகள் போன்ற சுயநல நாட்டங்களை வேரறுக்கின்ற போராட்டம். இத்தகைய புனிதத்தை நோக்கி சவால் நிறைந்த இந்த போராட்டத்தில் கடவுளின் உடனிருப்பும், பராமரிப்பும், தூய ஆவியாரின் வழிகாட்டுதலும் நம்மோடு என்றும் உண்டு என்பதை மறந்துவிடக்கூடாது. இவ்வாறு நாம் கிறிஸ்துவ வாழ்வில் உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் சந்திக்கும் சவால்களை ஏற்று நல்ல கிறிஸ்தவ வாழ்க்கை வாழ தொடர்ந்து இத்திருப்பலியில் இணைவோம். ●



# வரங்களின் வாய்க்கால்கள்…6

Dr.Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

**39 கடவுளின் மகன்:** “படகில் இருந்தோர் இயேசுவைப் பணிந்து, ‘உண்மையாகவே **நீரே இறைமகன்**’ என்றனர். (மத் 14:33) இயேசுவோடு நெருங்கி வாழ்ந்த சீடர்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அவரிடம் காணப்பட்ட இறைத் தன்மையைக் கண்டு **“நீர் கடவுளின் மகன்”** என்று அறிக்கையிட்டிருக்கின்றனர். இங்கு படகு புயலால் அலைக்கழிக்கப்பட்டபோது இயேசு அதைத் தம் ஆற்றலால் அமைதிபடுத்துகிறார். அப்போது படகில் அனைவருமே அவரை இறைமகன் என்று அறிக்கையிட்டனர். நற்செய்தியில் பல இடங்களில், இயேசு! இறைமகன் என மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டார். இறுதியாக அவர் சிலுவையில் உயிர்விட்ட பின்னரும்கூட படைவீரர் ‘இவர் உண்மையாகவே கடவுளின் மகன்’ என்று அறிக்கையிட்டார். சிலர் நினைக்கின்றனர், இயேசு புதுமைகள் பல செய்ததால் அவரைக் கடவுள் என்கிறார்களா? இல்லை. மோசே கையால்கூட பெரும் புதுமைகள் நிகழ்ந்தன. அவரை யாரும் கடவுள் என்று கூறவில்லையே. இன்னும் சிலர் கூறுகின்றனர். ‘அவர் அதிகத் துன்பங்களை பொறுமையோடு தாங்கிக்கொண்டதால் அவரைக் கடவுள் என்கிறார்களா? இல்லை. எத்தனையோ மறைசாட்சியர் அதிக வேதனைகளை இயேசுவுக்காகப் பொறுமையோடு தாங்கியிருக்கின்றனர். உயிரோடு தோலுரிக்கப்பட்டு இறந்திருக்கின்றனர், நூறு துண்டுகளாக வெட்டப்பட்டுப் பல நாட்கள் துன்பம் அனுபவித்து உயிர்விட்டிருக்கின்றனர். அவர்களை எல்லாம் கிறித்தவம் கடவுள் என்று அழைப்பதில்லையே!

**40. உயிருள்ள கடவுளின் மகன்:** “சீமோன் பேதுரு மறுமொழியாக, ‘நீர் மெசியா, **வாழும் கடவுளின் மகன்**’ என்று உரைத்தார்.’ அதற்கு இயேசு, “யோனாவின் மகனான சீமோனே, நீ பேறு பெற்றவன். ஏனெனில் எந்த மனிதரும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, மாறாக விண்ணகத்தில் உள்ள என் தந்தையே வெளிப்படுத்தி யுள்ளார்.” (மத் 16:16) உயிருள்ள கடவுள் என்றால் இறந்த கடவுள் என ஒருவர் இருக்கின்றாரா? ஆம், மனிதன் உருவகித்துக்கொண்ட கைவேலைப்பாடான கடவுளர்கள் உயிரற்ற கடவுளர்கள். ஆனால் மனிதனுக்கு உயிரளித்துக் காத்துவரும் கடவுள்தான் உயிருள்ள கடவுள். இந்த அடைமொழியை இஸ்ரயேல் மக்களுக்குக் கடவுளே பல இடங்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

**41. உன்னதரின் மகன்:** “இயேசுவே உன்னத கடவுளின் மகனே, உமக்கு இங்கு என்ன வேலை? கடவுள் மேல் ஆணை! என்னை வதைக்க வேண்டாம். என்று உரத்த குரலில் கத்தினார்.” (மாற்கு 5:7) இயேசுவைக் கடவுள் என்று வெவ்வேறு மக்கள் அறிக்கையிட்டது ஒரு புறமிருக்க சாத்தான் அதாவது கண்ணால் காண முடியாத ஓர் ஆவி கூறியதும் சிந்திக்க வேண்டிய ஒன்று. இயேசு சாத்தானை வதைக்க வந்தவர் என்ற ஒரு புதிய கருத்தை இங்கு சாத்தான் வெளிப்படுத்துகிறான். ஆம், சாத்தானின் தீச் செயல்கள் அழிக்கப்படும்போது சாத்தான் வதைக்கப் படுகிறான். இயேசு மனிதரை அவர்களுடைய பாவங்களில் இருந்து மீட்கவும் தீமையை அழிக்கவும் வந்தார். நேர்மையாளர் எவரும் தீமையை எதிர்ப்பர். அதற்காகத் துன்புறவும் ஏன், உயிரைக் கொடுக்கவும் தயாராக இருப்பர். இயேசுவின் போதனையை ஏற்றுக்கொள்ளும் எவரும் தீமையை எந்த வடிவில் வந்தாலும் எதிர்ப்பர்.

**42. மனித மகன்:** “இயேசு பிலிப்புச் செசரியா பகுதிக்குச் சென்றார். அவர் தம் சீடரை நோக்கி, ‘**மானிட மகன்** யாரென்று மக்கள் சொல்கிறார்கள்?’ என்று கேட்டார்.” (மத் 16:13) இயேசு, ‘மக்கள் என்னை யாரென்று சொல்கிறார்கள்? என்று கேட்கவில்லை. தன்னை மானிட மகன் என்கிறார். அப்படியானால் மனித உருவில் தோன்றியுள்ள என்னை மக்கள் எப்படிப் பார்க்கின்றனர் என்பது பொருள் அல்லவா? கடவுள் மனிதனாகப் பிறக்க வேண்டும் என்று மனிதன் கேட்கிறான். ஆனால் மனிதனாகப் பிறந்துவிட்டால் அவர் கடவுளா என்ற சந்தேகம் எழும்புகிறது. மனிதன் எதிர்பார்க்கும் கடவுளிலிருந்து வித்தியாசமானவர்தான் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. தன்னைக் கடவுள் என்று எண்பிப்பதிலும் அதற்காகவே தன் உயிரைக் கொடுப்பதிலுமே அவர் வாழ்நாளில் அதிக நேரத்தைச் செலவிட வேண்டியிருந்தது.

“இரவில் நான் கண்ட காட்சியாவது: வானத்தின் மேகங்களின் மீது **மானிட மகனைப்** போன்ற ஒருவர் தோன்றினார், இதோ! தொன்மைவாய்ந்தவர் அருகில் அவர் வந்தார், அவர் திருமுன் கொண்டு வரப்பட்டார். ஆட்சி யுரிமையும் மாட்சியும் அரசும் அவருக்குக் கொடுக்கப்பட்டன, எல்லா இனத்தாரும் நாட்டினரும் மொழியினரும் அவரை வழிபட வேண்டும், அவரது ஆட்சியுரிமை என்றுமுளதாகும். அதற்கு முடிவே இராது. அவரது அரசு அழிந்து போகாது.” (தானியேல் 7:13-14)

**43. இம்மானுவேல்:** “ஆதலால் ஆண்டவர்தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தை அருள்வார். இதோ, கருவுற் றிருக்கும் அந்த இளம்பெண் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப் பார். அக்குழந்தைக்கு அவள் ‘இம்மானுவேல்’ என்று பெயரிடு வார்.” (எசாயா.7:14) இம்மானுவேல் என்றால் கடவுள் நம்மோடு என்று பொருள். வரங்களில் எல்லாம் பெரிய வரம் கடவுள் நம்மோடு இருப்பது. வரங்களைத் தருபவரே உடன் இருக்கும்போது வேறு பெரிதாக என்ன வரம் வேண்டும்?

**44. ஆல்ஃபா ஒமேகா:** “பின்னர் அவர் என்னிடம் கூறியது: ‘எல்லாம் நிறைவேறிவிட்டது. **அகரமும் னகரமும்** நானே. தாகமாய் இருப்போருக்கு வாழ்வு அளிக்கும் நீரூற்றிலிருந்து நான் இலவசமாய் குடிக்கக் கொடுப்பேன்.” “அகரமும் னகரமும், முதலும் இறுதியும், தொடக்கமும் முடிவும் நானே.” (தி.வெ. 21:6, 22:13) இயேசு கடவுள் என்பதால் அவருக்குத் தொடக்கமும் முடிவும் இல்லை. அவரே எல்லாம்.

**45. எல்லாம் வல்லவர்:** “அகரமும் னகரமும் நானே” என்கிறார் கடவுளாகிய ஆண்டவர். இருந்தவரும் இருக்கின்றவரும் வரவிருக்கின்றவரும் **எல்லாம் வல்லவரும் அவரே.**” (தி.வெ. 1:8) வல்லமை கடவுளுக்கே உரியது. மனித வல்லமை எல்லாம் ஓர் எல்லைக்கு உட்பட்டது. பெரும் ஒலிம்பிக் மாவீரர்களைப் பார்க்கிறோம் ஒரே ஒரு விபத்தில் கைகால்கள் செயலிழந்து சக்கர நாற்காலியில் காலத்தைக் கழிப்பதைப் பார்க்கிறோம். பெரிய அறிவாளிகளின் முடிவும் அப்படித்தான்.

**46. ஆண்டவராகிய கடவுள்:** “தூய இறைவாக்கினர்கள் முன்னுரைத்த வாக்குகளையும் **ஆண்டவரும் மீட்பரு மானவர்** உங்கள் திருத்தூதர் மூலமாகத் தந்த கட்டளை களையும் நீங்கள் நினைவில் கொள்ளுங்கள்.” (2பேதுரு 3:2)

**47. மகிமையின் ஆண்டவர்:** “இவ்வுலகத் தலைவர்கள் எவரும் அதை அறிந்து கொள்ளவில்லை. அறிந்திருந்தால், அவர்கள் **மாட்சிக்குரிய ஆண்டவரைச்** சிலுவையில் அறைந்திருக்க மாட்டார்கள்.” (1 கொரி 2:8) உண்மையான நிலையான மாட்சிக்குரியவர் இயேசு ஒருவரே!

**48. அனைவரின் ஆண்டவர்:** “இயேசு கிறிஸ்து வாயிலாக அமைதி உண்டு என்னும் நற்செய்தியை அவர் இஸ்ரயேல் மக்களுக்கு அனுப்பினார். அவரே **அனைவருக்கும் ஆண்டவர்**” (தி.ப. 10:36) அவரே தன்னை ஏற்றுக்கொண்டவர்கள் ஏற்றுக்கொள்ளாதவர்கள் அனைவருக்கும் ஆண்டவர்.

- தொடரும்



# இறைவாக்கினர்

– சுவாமி ஆ. லூயிஸ்.

“இதோ பார்! என் சொற்களை உன் வாயில் வைத்துள்ளேன். ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது” இவ்வாறு இறைவன் இஸ்ராயேல் மக்களை வழிநடத்த இறைவாக்கினர்களை அழைத்து, நியமித்து, தனது மக்களைப் பராமரித்து வந்தார். இறுதியாக தனது மகனையே நம்மிடையே இறைவாக்கினராய் இருக்க அருள்பொழிந்தார். இத்தகைய அழைப்பைத்தான் திருமுழுக்குப் பெறும் ஒவ்வொருவரும் பெறுகின்றனர். அவர்கள் வழியாக இறைவன் பேசுகின்றார்.

நாம் அனைவரும் இறைவனின் பிள்ளைகள், இயேசுவின் சீடர்கள், ஆவியின் ஆலயங்கள். நமது பேச்சு, கலந்துரையாடல், சிந்தனை, சொல், செயல் அனைத்தும் எவ்வாறு இடம் பெற்று வருகிறது என்று சற்று யோசித்தால் பயன்தரும். பொதுவாக நாம் பயன்படுத்தும் நூறு சொற்களில், அறுபது பயனற்றவை, இருபது தேவையற்றவை, மீதியுள்ள இருபது பயன்மிக்கவை என்பது ஒரு கணக்கு. நமது சொல், செயல், சிந்தனை இவைகளுக்குள் நிறைய பிளவும் பூசலும், இடைவெளியும் ஏமாற்றமும் கலந்திருக்கின்றன. வாய்மை, மெய்மை, உண்மை என்பது பல்வேறு வடிவங்களில் இடம் பெறுவதால் நமக்குள் நம்பகத்தன்மை மிகவும் பாதிக்கப் படுகிறது. விழிப்போடு வாழ முயல்வோம்.

**இயேசு கிறிஸ்து:** மனித குலம் மேம்பட கடவுள் தனது ஒரே மகனை நம்மோடு வாழ வைத்து வழிநடத்துகின்றார். அவரை நாம் பயன்படுத்துகின்றோமா அல்லது அவர் நம்மை ஆட்கொண்டு வழிநடத்துகின்றாரா என்று சிந்தித்துப் பார்ப்போம். இயேசு பாவமின்றி பிறந்தார், வாழ்ந்தார். நம்மோடு உரையாடினார். நாமும் அவரைப் போல வாழ, பேச, செயல்பட அழைக்கப்படுகின்றோம். இயேசு என்னும் போர்வையில் அல்லது முகமூடியில் நமது சுயநலம் செயல் படுவது இயேசுவுக்கும் நமக்கும் நாம் இழைக்கும் தவறாகும்.

“பொய்ச்சான்று கூடாது” என்று கற்பனை வழியாக வலியுறுத்திய இறைவன், இயேசு வழியாக மெய்மையை நோக்கி நம்மை அழைத்துச் செல்கிறார். மெய்மை உணர்வு தான் பேரின்பம் என்பதால், பொய்மை வழி வரும் சுகம் தற்காலிகம். உடலைச் சார்ந்தவை நிரந்தரமானது அல்ல, உயிரைச் சார்ந்ததுதான் நிரந்தரம். தற்காலிக சந்தோஷத்தில்தான் பெரும்பாலும் நாம் வாழ விரும்புகின்றோம். மெய்மை எதிர்பார்க்கும் சவால்களை நாம் ஓரங்கட்டி விடுகின்றோம். உண்மைக்குச் சான்று பகர்ந்தால் துன்பம் தான் பரிசாகக் கிடைக்கும் என்பது உறுதி.

**திருமுழுக்கு:** பெரும்பாலும் நாம் எல்லாரும் குழந்தையாய் இருக்கும் போது திருமுழுக்குப் பெற்று மெய்மையின் பாதையில் பயணிக்க கடவுள் திருச்சபை வழியாக, பெற்றோர்கள், ஞானப் பெற்றோர்கள், மற்றவர்கள் வழியாக உதவுகின்றார் என்பதால் கிறிஸ்தவ சமூகம் உண்மையுள்ளதாய் விளங்குவது முக்கியம். ஓரளவு வெற்றி பெற்றிடினும் முழு வெற்றியை நோக்கி நாம் விழிப்பாக பயணம் செய்ய கடவுள் அருள்புரிந்து வருகிறார்.

திருமுழுக்கு நாம் பெறும்போது திருச்சபை வழியாக மூவித கொடைகளை வழங்குகின்றார். குரு, இறைவாக்கினர், வழிகாட்டி என மூவித அருளை அருளுகின்றார். இக்கொடையில் நம்மை வளர்த்து வந்து, நாமும் மற்றவர்களை வளர்த்துவர அழைக்கப்படுகின்றோம். உலகக் காரியங்கள், உடலைச் சார்ந்த காரியங்கள் நம்மை உடலின் இன்பவனத்திலே தேக்கி வைத்து நம்மை விளையாட வைக்கின்றது. உடலைக் கடந்து, உள்ளத்திற்கும், உள்ளத்தைக் கடந்து உயிருக்கும் நாம் பயணிப்பது வாழ்வின் நெறியாகும், முறையாகும். கடவுள் அருளும் வாழ்வைத்தான் நாம் எப்பொழுதும் மையமாக வைத்து, பேணவேண்டும். ஆனால் உலகின் கவர்ச்சி நம்மை சிறைப்படுத்தி விடுகிறது. சிறை வாழ்வு சொகுசு வாழ்வாக நம்மில் இடம் பெறுகிறது. திருமுழுக்கில் நாம் கொடுத்த வாக்குறுதிகளை எளிதில் மறந்து விடுகிறோம்.

**வாக்கு வழி வாழ்வு:** நாம் ஒவ்வொருவரும் ஆற்றலின் தொகுப்பாகும். உடல் ஆற்றல், உள்ளத்து ஆற்றல், உயிரின் ஆற்றல். இவைகளில் மேலானது உயிர் ஆற்றல். உயிர் ஆற்றலின்படி உள்ளம், உடல் உடன்பட்டு ஒழுகினால் உத்தம வாழ்வு தினம் மலரும். இல்லையேல் வாழ்வு மிகவும் பாதிக்கப்படும் என்பதை நமது வாழ்க்கை அனுபவத்திலிருந்து இன்னமும் கற்றுக் கொள்ளத் தயங்குகிறோம். மௌனம் இறைவனின் முழு இருப்பாகும். சப்தம் மௌனத்தின் வெளிப்பாடாகும். வாக்காகும், மெய்யான மௌனத்திலிருந்து எழும் வார்த்தைகளுக்கு மிகவும் பொருள் உண்டு. சரியாக யோசிக்காமல், நம்பாமல் நம்மிடமிருந்து வரும் வார்த்தைகட்கு அவ்வளவு பொருள் இருக்காது. அளவுக்கு அதிகமாகப் பேசுவதால், சப்தம் போடுவதால் சப்தம் மாசுபடுகின்றது. இதனால் மக்கள் மத்தியில் குழப்பமும் சொற்போரும் இடம் பெறுவதுண்டு, பெருந் தன்மையானவர்கள் ஒருசில வார்த்தைகளை மட்டும் பேசுவர், நிறைய பேசமாட்டார்கள். நிறை குடம் அமைதியாக இருக்கும், குறைகுடம் சப்தமிடும் என்பதை புரிந்து கொள்வோம்.

நமது சிந்தனை, சொல், செயல் இவைகட்கு கடவுள் மிகச் சிறந்த முறையில் உதவுகின்றார். தன்னில் நிறைந்திருக்கும் ஒரே மகன் இயேசு கிறிஸ்துவையே நமக்கு அளித்து வருகிறார். இயேசு இவ்வாறு சிந்திப்பாரா, சொல்வாரா, செய்வாரா என்று ஒரு நொடிப் பொழுது நாம் நிதானித்து வாழ்ந்தால் பொருளும் அருளும் மிகுந்த வாழ்வை வாழ முடியும். தேவையில்லாத துன்பங்களை விலக்க முடியும். இறைவனின் சமாதானத்தைச் சுவைக்க முடியும். மக்களுக்குள் நம்பகத் தன்மை வலிமைபெறும். இறைவனின் பிள்ளைகள் நாம் அனைவரும் என்பதால் அவர் அருளும் சொற்கள்படி உரையாடினால், உறவாடினால் எவ்வளவோ அன்புச் சமூகத்தை இம்மண்ணில் கட்டி எழுப்ப இயலும். அதுவே புதிய சமுதாயமாக, இறையரசாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்நிலையைத்தான் கிறிஸ்தவச் சமூகம், திருச்சபை, அடிப்படை கிறிஸ்தவக் குழுக்கள் கட்டி எழுப்ப கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். இயேசு உணர்வு நம்மில் என்றும் வளர்க! ●

**வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு :** சர்வவியாபி இதழில் மரித்தோர் நினைவு செபம் பதிவு செய்ய விரும்புவோர் குறைந்தது **மூன்று வாரங்களுக்கு முன்** பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

**2019-2020** சர்வவியாபி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும். MO/DD/CHEQUE/ வங்கி மூலம் செலுத்தலாம். **சந்தா எண்ணை** தவறாமல் குறிப்பிடவும். - ஆசிரியர்.

**வங்கி கணக்கு விவரம்**

| | | |
|---|---|---|
| BANK NAME | : | IOB-PONDICHERRY MAIN<br>JAWHARLAL NEHRU STREET, Pondy-1. |
| A/C Name | : | MISSION PRESS |
| A/C. No. | : | 007002000000123 IFSC : IOBA0000070 |
| தொடர்புக்கு | : | 0413 / 2334360 |



# உலக மீட்பர் காப்பியம்



பேராசிரியர், முனைவர். **ச.சாமிமுத்து,** திருச்சி.

**24-ஆம் படலம்**

கடந்தேகு திருவிழா (பாஸ்கா : கடத்தல்) நாள் வந்தது. நான் இன்றிரவே எகிப்து நாடெங்கும் கடந்து சென்று எகிப்து நாட்டின் மனிதர் தொடங்கி விலங்குவரை அனைத்து ஆண்பால் தலைப்பிறப்பையும் சாகடிப்பேன். எகிப்தின் தெய்வங்கள் அனைத்தின் மேலும் நான் தீர்ப்பிடுவேன். நானே ஆண்டவர்! இரத்தம் நீங்கள் இருக்கும் வீடுகளில் உங்களுக்கு அடையாளமாக இருக்கும். நான் இரத்தத்தைக் கண்டு உங்களைக் கடந்து செல்வேன்... என்றார் கடவுள். – (விப.12:12–13)

காப்பியப் பாடல் 1245

15 **“விடுதலைப் பயணப் பொழுதும் புலர்ந்தது! மனித வரலாற்றில் அடிமைகளாய் வாழ்ந்த இலட்சோப லட்ச இசுரயேல் மக்களை விடுவித்து அவர்களுக்கு ஆபிரகாம் வழியாய் வாக்களிக்கப்பட்ட கானான் தேசத்திற்கு எல்லாம் வல்ல இறைவனே, மோசே தலைமையில் தாம் முன்னின்று வழிநடத்தினார்!”**

காகம் கதறிக் கரைவதைப் போன்றே
சோகம் சூழச் சொடிங்கிச் சோர்ந்த (சொடுங்கி-வாடி)
இறைவனின் மக்கள் அடிமையில் இருந்து,
உறைந்தவர் வந்த எகிப்தை விட்டு
விடுதலை மக்களாய் இறைஒளிப் பாதையில்
தடுத்திட முடிந்திடாப் பயணம் மேற்கொள
வழிவகுத்(து) இறைவன் ஆணையும் வழங்கினார்!
அன்று அந்த ஆபிர காமை
கன்றை அழைக்கும் பசுவைப் போன்றே
அழைத்து யாவே, அவர்மர பதனைத்
தழைக்க வைத்துப் பாலும் தேனும்
வழிந்தே ஓடும் கானான் தேயம்
ஒழியா தென்றும் அவர்க்கே உரித்தாய்
இருந்திட ஈவதாய்ச் சொன்ன வார்த்தையே,
பெருக்கெடுத் தோடும் இறையருள் பெருக்காய்ப்
பிறப்பெடுத் திடும்அவ் வேளையும் வந்ததே
சிறப்பொடு யாக்கோப்(பு) இனத்தவர் வாழவே!

காப்பியப் பாடல் 1246

16 **கடத்தல் (பாஸ்கா) விழாவைப் பற்றி ஆண்டவர் கூறியவற்றை மோசேயும் ஆரோனும் இசுரயேல் பெரியோர்கு எடுத்துரைக்கச் சென்றனர்.**

ஆண்டவர் வாக்கை அள்ளியே கொண்டனர்
மூண்டெழும் ஆர்வப் பெருக்கில் துள்ளியே!
குதித்துப் போயினர் மோசே ஆரோன்,
மதித்துத் தம்இனப் பெரியோர் தம்மையே
கூவி அழைத்தனர் குதுகலிப் போடே!
தாவித் தாவிப் பன்னிறப் பறவைகள்!
ஏன்தான் இப்படிக் கீச்சு மூச்சென
வான்சென் றடையக் கத்தின வோதான்!

காப்பியப் பாடல் 1247

17 **இசுரயேலர், அடிமை வாழ்விலிருந்து விடுதலை வாழ்வுபெற மோசேயும் ஆரோனும் அழைத்த அழைப்பைக் கேட்டு இயற்கையே வியந்து வரவேற்று வாழ்த்தியது!**

அவர்கள் அழைப்பு எட்டுத் திக்கிலும்
கவர்ந்து இயற்கைக் கடல்மலை அனைத்தையும்
கூர்ந்து கேட்டிட வைத்ததே அன்று!
சேர்ந்து படைப்புகள் யாவும் இணைந்து
ஆர்த்தே ஆடின! ஆம் அவ் வழைப்பு
அடிமைக்(கு) ஓர்நல் முடிவைக் கொணர்ந்திடும்;
விடிவு காலமும் இசுரயேல் இனத்தவர்
உரிமை வாழ்வுக்(கு) உறுதியாய் வந்ததே!
தெரிந்தே கொண்டன இயற்கையில் அனைத்தும்!
கேட்டு அழைப்பினை இசுரயேல் பெரியோர்
வாட்டம் போக்கும் வரம்என் றார்த்தனர்!

- தொடரும்..



# உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன

- சகோ. **அ. ஆரோக்கியதாஸ்,** திண்டிவனம்.

தொடர்ச்சி...

**சிலைவழிபாடு** உண்மையாக வாழ்ந்து கொண்டிருக்கும் இயேசுவை, நாம் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனதோடும் அன்பு செய்ய வேண்டும். முழுமையாகதான், ஒரு சில விழுக்காடு அல்ல 100-100 நாம் அந்த ஒன்றுமில்லாமையிலிருந்து இவ்வளவு அதிசயிக்கத்தக்க விதத்தில் உடலின் உறுப்புகளைப் படைத்து, இயக்கி, அறிவு, திறமைகள் கொடுத்து, அந்த உண்மையான, வாழும் ஒரே கடவுளை அறிந்து, அன்பு செய்து, அவருக்கு கீழ்ப்படிந்து, அவரோடு நீடித்த நிலையான பேரின்ப வாழ்வில் வாழ அழைக்கப் பட்டிருக்கிறோம்.

**மிகப்பெரிய பாவம்:** நாம் பெற்றுள்ள இந்த உடல், அறிவு திறமை, வசதி வாய்ப்புகள், இன்னும் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு நிமிடமும் அவர் நம்மில் படைத்து உருவாக்கிய உடல் உறுப்புகளின் இயக்கத்தால்தான். குறிப்பாக நம் இதயம் 1 நிமிடத்திற்கு 72 முறையில் ஒரு நாளுக்கு 72 x 60 x 24 ஆக 1,03,680 முறை துடிப்பதால் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை மறந்து, நம்மை உருவாக்கியவர், நம்மை இயக்குபவர், நம்மை வாழ வைப்பவர் யார்? எதற்காக இந்த உடல், உலக வாழ்வு, வசதி வாய்ப்புகள் என்பதை உணர்ந்து, சிந்தித்து, தியானித்து, அறிவெல்லாம் கடந்த ஒரு சக்தி உண்டு என்று நம்ப வேண்டும். கண்ணுக்குப் புலப்படாத சக்தியை, கடவுளை, இறைவனை நமக்கு வெளிப்படுத்தியது இயேசு என்பவர்தான் என்பதை உணர வேண்டும், நம்ப வேண்டும். உலக வரலாற்றை இரு பெரும் கூறுகளாகப் பிரித்து கி.மு., கி.பி., என்று கணக்கிட்டு கிறிஸ்து பிறப்பு உண்மை என்றும், முக்கியம் என்றும், அவர் வாழ்ந்த போது என்ன கூறினார், எதற்காக கூறினார் என்பதை புரிந்துக்கொள்ள வேண்டும். நமது பாவ நிலை, மற்றும் ஒன்றுமில்லாத நிலையை உணர்ந்து, இயேசுவை, அவரை மீட்பராக அனுப்பிய இறைவனை நம்பி, இறை மகனாக ஏற்று, இயேசுவின் பாடுகளால்தான் நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்பதை உணர்ந்து ஏற்க வேண்டும்.

இறைமகன் இயேசு, உண்மையான இறைவனை அறிந்து கொள்ளும் ஆற்றலை நமக்குத் தந்துள்ளார். இது நமக்குத் தெரியும். நாம் உண்மையான இறைவனோடும், அவர் மகன் இயேசு கிறிஸ்துவோடும் இணைந்து வாழ்கிறோம். இவரே உண்மையான கடவுள். இவரே நிலை வாழ்வு, (1யோவான். 5:20 5-21). எனவே, சிலை வழிபாட்டைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்கிறார் தூய யோவான்.

இயேசு கூறிய முதல், முதன்மையான கட்டளை, வாழும் ஒரே கடவுளை மட்டுமே வழிபட வேண்டும். ஆண்டவருக்கு அஞ்சி நடக்க வேண்டும். ஆண்டவர் பற்றிய அச்சமே ஞானத்தின் தொடக்கம். மனிதன் அறிவில், அறிவியலில் சிறந்து விளங்குகிறான். அறிவில் வளர்ச்சியடைகிறான். அறிவுபெற பல முயற்சிகள் மேற்கொள்கிறான். ஆனால் ஞானத்தில் வளர்வதில்லை. வைகறையில் அவரைத் தேடுவோர் அவரது பரிவைப் பெற்றுக்கொள்வர். (யாக்கோபு 1:5) உங்களிடையே குறைவான ஞானம் கொண்டிருப்போர், கடவுளிடத்தில் கேட்கட்டும். அப்போது அவரும் ஞானத்தைக் கொடுப்பார். அவர் முகம் கோணாமல் தாராளமாய் எல்லாருக்கும் கொடுப்பார். ஆனால் நம்பிக்கையோடு, ஐயப்பாடின்றி கேட்கவேண்டும். ஐயப்பாடு கொள்பவர்கள் ஆண்டவரிடம் ஏதாவது பெற்றுவிட முடியும் என நினைக்காதிருக்கட்டும்.

- தொடரும்..



# தண்ணீரைத் தேடி!

பொறிஞர் ஞா. ஆண்டோ - புதுச்சேரி

□நீர்த்திரளின் மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது□ (தொ.நூ.1:2)

திருவிவிலியம் தண்ணீரையே முதன்மையாக வைத்து தொடங்குகிறது □நீரின்றி அமையாது உலகு□ அதாவது உயிரினங்கள் தாவரங்கள் முதலியன வாழ □நீர்□ அடிப்படையான அவசியத் தேவையாகிறது. வான்தரும் அமிழ்தம் மழைநீர்.

ஆண்டவர் நோவாவிடம் □இன்னும் ஏழு நாட்களில் மண்ணுலகின்மேல் நாற்பது பகலும் நாற்பது இரவும் நான் மழைபெய்விக்கப் போகிறேன். நான் உருவாக்கிய உயிரினங்களை எல்லாம் இந்த நிலத்திலிருந்து அழித்தொழிப்பேன்.□ (தொ. நூ.7:4). என்று சொன்னார்.

அதன்படி நோவாவின் அறுநூறாவது வயதில் □பேராழத்தின் ஊற்றுகளெல்லாம் பீறிட்டெழுந்தன. வானங்களின் மதகுகள் திறக்கப்பட்டன. நாற்பது பகலும்இ நாற்பது இரவும் மண்ணுலகில் பெருமழை பெய்தது. நாற்பது நாட்களாய் பெரு வெள்ளம் மண்ணுலகில் வந்துகொண்டிருந்தது. வெள்ளம் பாய்ந்து பெருகப் பெருக மலைகள் எல்லாம் மூழ்கின. மனிதர் முதல் விலங்குகள், கால்நடைகள், ஊர்வன, வானத்துப் பறவைகள் ஈராக மண்ணில் வாழ்ந்த அனைத்தும் அழிந்தன.

நீர்த்திவலைகள் மேக மூட்டம் போல் காட்சியளிக்கும். அதிலிருந்து உண்டாகும் பேரிரைச்சல் காதைப் பிளந்துவிடும். இவை அழிவின் அறிகுறிகள்.

நோவாவின் அறுநூற்று ஒன்றாம் வயதின் முதல் மாதத்தில் முதல் நாளில் மண்ணுலகப் பரப்பிலிருந்து வெள்ளம் வற்றியது.

யோவான் நற்செய்தி அதி.4 இல் இடம்பெற்றுள்ள இயேசு-சமாரியப் பெண் சந்திப்பில் தாகம் எடுக்கும் தண்ணீர்- தாகம் எடுக்காத தண்ணீர் பற்றிய உரையாடல், இரு வகைத் தண்ணீர் பற்றி கூறுகிறது. ஒன்று உலகம் சார்ந்த தண்ணீர். இன்னொன்று உலகம் சாராதது .

திருமுழுக்கு யோவான் தண்ணீரினால் திருமுழுக்கு அளித்து வந்தார். இவரிடம் எருசலேமிலும் யூதேயா முழுவதிலும் யோர்தான் நதியின் அடுத்துள்ள பகுதிகளிலும் இருந்தவர்கள் சென்றார்கள். யோர்தான் நதியில் அவரிடம் திருமுழுக்கு பெற்றார்கள். (மத்.3:5-6) இயேசுவும் திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்கு பெற்றார். அங்கே தமதிருத்துவத்தின் பிரசன்னம் நிகழ்ந்தது (மத்.3:16-17).

ஓர் அணையில் தேக்கிவைக்கப்பட்ட நீர் அணையிலிருந்து திறந்துவிடப்படும்போது நீர் வெளியாகும் வேகம் பாறையையும் நொறுக்கிவிடும். மழைநீர் பொய்த்துப் போனால் உயிர்கள் உணவின்றி பசியால் வாடும். உழவுத் தொழில் பாதிக்கப்படும். ஆழ்ந்த கடலும் காய்ந்துவிடும். நீர் மற்றும் நிலத்தில் வாழும் உயிரினங்கள் மடிந்துபோகும்.

பல நாடுகள் நதிக்கரையில் இருப்பதையும், பல ஊர்கள் ஆற்றங்கரையில் இருப்பதையும் காணும்போது மனித நாகரிகம் தண்ணீரை நம்பியே உள்ளது என்பது தெளிவாகும். இதைத்தான் □நதி நாகரிகம்□ எனக் குறிப்பிடுகிறோம்.

தொடக்க நூலில் காணப்படும், நைல் நதி, யூப்பிரத்தீசு ஆறு, திக்ரீசு ஆறு போன்றவை மனித சமூகத்திற்கு காலங்காலமாய் செய்து வரும் தொண்டு வியக்கத்தக்கது.

ஒன்றிணைந்த இஸ்ரேல் நாட்டில் ஓடி வரும் ஜோர்தான் நதி இயேசுவின் வாழ்க்கையில் இரண்டறக்கலந்துள்ளது. மழைநீர் - வளங்களைத் தரும். நுகர் பொருளாய் மாறும். மழைநீரால் கொடையும் தவமும் சிறக்கும். உயிர்களின் ஒழுக்கம் தழைத்தோங்கும்.

*இன்றைக்கு ஒரு மனிதனுக்குச் சராசரியாக எல்லா தேவைக்கும் 100 லிட்டர் (3 க.அடி.) தண்ணீர் தேவைப் படுகிறது.*

***ஓராளுக்கு ஓராண்டுக்குத் தேவை சுமார் 1இ000 க.அடி. 1000 பேருக்குத் தேவை 10இ00இ000 க.அடி. (1மி.க.அடி)10லட்சம் பேருக்குத் தேவை 1இ000 மி.க.அடி (1டி.எம்.சி.) 1கோடிப் பேருக்கு 10 டி.எம்.சி.***

***8 கோடி மக்கள் தொகையைக் கொண்ட தமிழகத்திற்கு அதிகபட்சமாக 100 டி.எம்.சி. தண்ணீர் தேவைப்படுகிறது***

***தமிழ்நாட்டின் மொத்த பரப்பளவு சுமார்1இ30இ000 ச.கி.மீ.***

***சராசரி மழையளவு 75 முதல் 80 செ.மீ. ஆண்டுக்குச் சராசரி 1 ச.கி.மீக்கு சுமார் 26 மி.க.அடி.***

***சுமார் 1இ30இ000 ச.கி.மீக்கு 440 டி.எம்.சி. மழை நீர் கிடைக்கிறது***

***(10 டி.எம்.சி. மழை நீர் என்பது 1000 மி.க.அடி)*** (நன்றி: நம் வாழ்வு)

நிலநடுக்கத்தின் காரணமாக கடலுக்கு அடியிலுள்ள மண் அடுக்குகள் உடைந்து சிதைந்து நகரத் தொடங்கியதன் காரணமாக கடல் நீர் மதில்சுவர் போல கரையை நோக்கி சீரிப்பாய சுனாமி உருவானது. கரையைக் கடந்து பல கி.மீ. தொலைவுக்கு ஊருக்குள் புகுந்து கண்ணிமைக்கும் நேரத்தில் பல உயிர்களைப் பலி வாங்கி பல கட்டிடங்களைத் தரைமட்டமாக்கி பெருத்த சேதத்தை ஏற்படுத்தியதை மறக்க முடியுமா? வேகமாகப் பாய்ந்துவரும் தண்ணீரின் அழிவுச்சக்தியை அலட்சியப்படுத்த முடியுமா? உயிர் தரும் தண்ணீர் உயிர் பரிக்கும் தண்ணீராக மாறுகின்ற இயற்கையின் ஆற்றலை என்னென்று சொல்வது?

இந்து சமயக் கடவுளான சிவபெருமான் தன் தலையில் கங்கை நதிக்கு இடம் தந்திருப்பது தண்ணீரின் புனிதத்தை, மகத்துவத்தை, இன்றியமையாதத் தன்மையை உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

விடுதலைப் பயணத்தில் செங்கடல் பிளந்து நீர்த்திரள் வலப்புறமும் இடப்புறமும் இஸ்ரயேலருக்குச் சுவராக நின்றது. இஸ்ரயேலர் உலர்ந்த தரையில் நடந்து சென்று செங்கடலைக் கடந்தார்கள். எகிப்தியர் இஸ்ரயேலரை விரட்டிச் சென்றபோது நீர்த்திறள் எகிப்தியரைச் சூழ்ந்துகொண்டு நடுக்கடலில் அமிழ்ந்து போனார்கள். ஆண்டவர்தாமே இஸ்ரயேலர் சார்பாக நின்று எகிப்தியருக்கு எதிராகப் போரிட்டார். இந்த அற்புதக்காட்சி செங்கடலில் நிகழ்ந்தது.

திருமுழுக்கில் சிறு துளி தண்ணீர் புனித நீராகிறது. சிறு துளி பெரு வெள்ளம் என்பார்கள். நாற்பது நாள் தொடர்ந்து பெய்த மழையால் தண்ணீர், அழிவின் ஆற்றலானது. நதிக்கு சாதி, மத பேதம் கிடையாது. இதையே கவிஞர் கண்ணதாசன் இப்படிப் பாடுவார்-

***ராமன் என்பது கங்கை நதி***
***அல்லா என்பது சிந்து நதி***
***இயேசு என்பது பொன்னி நதி.***

138 இளம் உள்ளங்களுக்கு

## என்னை மன்னியும்



– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.

**சந்நியாசியின் வேண்டுதல்:** ஒரு சந்நியாசியைப் பார்த்து ஒரு பக்தன், "நீர் எப்போதுமே கடவுளின் மன்னிப்பை மன்றாடிக் கொண்டே இருக்கிறீர். பல வருடங்களாகவே நான் இதை கவனித்துக் கொண்டு வருகிறேன். காலையும், மாலையும், எந்நேரமும் மன்னிப்பையே மன்றாடிக் கொண்டிருக்கிறீர், ஏன்?" என்றான். அதற்கு அந்த சந்நியாசி, "மகனே, அது என் பழக்கம்" என்றார். "ஆனாலும் குருவே, நீர் மேலோட்டமாக இல்லாமல் உளமாற உருக்கமான மனதுடனே இதைச் செய்வதை நான் அறிவேன். இதன் இரகசியம் என்ன?" என்று கேட்டான்.

**நடந்த சம்பவம்:** சந்நியாசி இப்போது விளக்கம் அளித்தார்: "இதற்கு ஒரு காரணம் இருப்பது உண்மைதான். முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நான் இந்த நகரத்தில் ஒரு வியாபாரி. ஒருநாள் மதியம் நான் கடையை மூடிவிட்டு வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தபோது, நான் கடை வைத்திருந்த பகுதியில் தீ மூண்டு எரிவதாக கூறியது என் காதில் விழுந்தது. உடனே என் வீட்டிற்குச் செல்லாமல் கடையை நோக்கி ஓடினேன். நான் ஓடிக்கொண்டிருந்தபோது ஒரு மனிதன் என்னை நிறுத்தி, 'நீர் ஓடவேண்டாம். எல்லா கடைகளும் எரிந்துசாம்பலாகிவிட்டன. ஆனால் உம்முடைய கடைக்கு எந்த சேதமும் இல்லை' என்றார். நான் நிம்மதி பெருமூச்சு விட்டு, 'நன்றி இறைவா' என்றேன். ஆனால் அடுத்த நொடியே என் தவறை நான் உணர்ந்தேன். எவ்வளவு சுயநலமாக நான் நடந்துகொண்டேன். அவசரத்தில், என் கடை தீயிலிருந்து காப்பாற்றப்பட்டதற்கும், மற்றவர்களுடைய கடைகள் தீக்கிரையானதற்கும் சேர்த்து நன்றி சொன்னது போலாகிவிட்டது! அதனால்தான் அன்றிலிருந்து கடவுளே என்னை மன்னியும் என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டேயிருக்கிறேன்" என்றார்.

**நன்றியிலும் சுயநலம்:** இறைவனிடம் விண்ணப்பித்து வேண்டுதல் செய்யும்போதும், நன்றி நவிலும்போதும் இயேசு தந்த அன்பு கட்டளையை நினைவில் கொள்வோம். சுயநலமில்லாமல் பிறரையும் நேசிக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்வோம். நாம் அடைந்த நன்மைகளுக்கு நன்றி கூறும் அதேசமயம் நம் அயலாருக்காகவும் வேண்டுதல் செய்ய மறக்க வேண்டாம். ●



### பேராசிரியர் பால் வளன் அரசுக்கு

### உலகத் தோழமை இந்திய நிறுவனம் தங்கப் பதக்கத்துடன் துரோணாச்சாரியார் விருது வழங்கியுள்ளது!

உலகத் திருக்குறள் தகவல் மையத் தலைவரும், தூய யோவான் கல்லூரியின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவருமான பேராசிரியர் பால் வளன் அரசுக்கு, தில்லி உலகத் தோழமைக்கான இந்திய நிறுவனம் **துரோணாச்சாரியார் விருதினைத் தங்கப் பதக்கத்துடன் வழங்கிப் பாராட்டியுள்ளது.** பேராசிரியர் பால் வளன் அரசு நாற்பத்தைந்து ஆண்டுகள், கல்லூரித் தமிழ்த் துறை ஊழியராகப் பணியாற்றி கல்வி மற்றும் சமூக மேம்பாட்டுக் காகவும், இலக்கிய வளர்ச்சிக்காகவும் ஆற்றிய அரும் பணிகளைப் போற்றிப் பாராட்டும் வகையில் இவ்விருதினை வழங்கியுள்ளது. பேராசிரியர் பால் வளன் அரசு, உலக அளவிலும், தேசிய அளவிலும், மாநில அளவிலும் நூற்று எட்டு விருதுகள் பெற்ற பெருமிதம் உடையவர். **துரோணாச்சாரியார் விருது** இவருடைய நூற்று ஒன்பதாவது விருது என்பது குறிப்பிடத்தக்க சிறப்பு மிக்கது.

## நான்தான் என்ற எண்ணம் மறைய வேண்டும்



– G. *போனிஃபாஸ் ஜூலியன்*, புதுவை–9.

ஒரு சமயம் ஒரு சிறந்த கல்விமான் ஆற்றங்கரையின் ஒரு கரையிலிருந்து மற்றொரு கரைக்கு செல்ல வேண்டும். ஒரே வழி படகில்தான் செல்ல வேண்டும். மற்ற எந்த போக்குவரத்தும் கிடையாது. இதற்காக கரை ஓரமாக பல படகோட்டிகள் தங்களுடைய படகுகளை வைத்துவிட்டு பயணிகளுக்காக காத்துக்கொண்டு இருப்பார்கள். மக்கள் படகில் போவதும், வருவதுமாய் இருப்பார்கள். இது ஒரு அன்றாட நிகழ்ச்சி. இத்தருணத்தில் மேலே குறிப்பிட்ட கல்வியாளர் தனக்கென்று ஒரு தனிப் படகை வாடகைக்கு பேசினார். அந்தப் படகை மூன்று, நான்கு பேர் ஓட்டிச் செல்வார்கள். படகு அடுத்த கரையைபோய்ச் சேர ஏறத்தாழ ஒரு மணி நேரம் ஆகும். இந்தக் கல்வியாளர் தனியே இந்தப் படகில் அமர்ந்து பயணிக்க ஆரம்பித்தார். இரண்டு மூன்று பேர் மாறி மாறி படகை ஒட்டினார்கள். இவருக்கு மவுனமாக செல்ல விருப்பமில்லை. அந்த படகோட்டிகளிடம் பலவித மான கேள்விகளை கேட்க எண்ணினார். மேலும் அவரு டைய கல்வித் தகுதி, குடும்ப நிலவரம், பொருளாதாரம், முதலியவற்றைக் கேட்டுக்கொண்டே பயணத்தில் ஈடு பட்டார். படகோட்டிகள் அத்தனை பேரும் நேர்மையான வர்கள். ஆனால் அவ்வளவு படிப்பறிவு இல்லாதவர்கள். பொருளா தாரத்தில் பின்தங்கியவர்கள். இந்த மனிதர் அவர்களிடம் பலவித கேள்விகளை கேட்டுவிட்டு மௌன மாய் சென்றிருக்கலாம். அப்படிச் செய்யாமல் ஒவ்வொரு வரையும் பார்த்து உங்களுக்கு கல்வித் தகுதி இல்லை யென்றால் எப்படி வாழ முடியும், என்னைப் போல் ஒரு பெரிய மனிதனாக வர முடியுமா? என்ற கேள்வியை எழுப்பி, கல்வி அறிவு இல்லாதவர்கள் சமூகத்தில் வாழத் தகுதியற்றவர்கள் என்று அவர்களைத் தரம் தாழ்த்தி மட்டம் தட்டிக்கொண்டே சென்றார். இது படகோட்டிகளின் மன நிலையை வெகுவாகப் பாதித்தது. இருந்தபோதிலும், அவர் பெரிய மனிதராயிற்றே எதிர்த்து பேச அவர்களுக்கு தைரியமில்லை. மவுனம் காத்தப்படி அவர் சொல்வதையெல்லாம் கேட்டுக் கொண்டு படகை ஓட்டினார்கள். இத்தருணத்தில் திடீரென்று ஒரு பெருங்காற்று வீசியது. படகு தடுமாறியது. அனைவரும் நிலைகுலைந்தனர், கண் இமைக்கும் நேரத்தில் இந்த படித்த அறிவாளி ஆற்றிலே தூக்கி எறியப்பட்டார். உயிருக் காக போராடிக் கொண்டிருந்தார். என்ன செய்வதன்று அவருக்கு தெரியவில்லை. உடனடியாக படகோட்டிகள் அத்தனை பேரும் ஆற்றிலே குதித்து அவரைத் தூக்கி படகில் வைத்து அடுத்த கரைக்கு கொண்டு சேர்த்து அவருக்கு முதலுதவி கொடுத்தார்கள். சிறிது நேரத்தில் அவர் பழைய நிலைக்கு வந்துவிட்டார். அப்போது அனைத்து படகோட்டிகளையும் பார்த்து தனக்கு உதவி செய்ததற்கு நன்றி தெரிவித்தார். அப்போது படகோட்டி ஒருவன் அவரிடம் கேட்ட ஒரு கேள்வி அவரை சிந்திக்க வைத்தது. நீங்கள் எவ்வளவு படித்திருந்தும் தண்ணீரில் விழுந்தபோது உங்களை காப்பாற்றிக்கொள்ள உங்களுக்கு தெரிந்து கொள்ளவில்லையே. எங்கள் அனைவருக்கும் படிக்கத் தெரியாது தான் ஆனால் எங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள எங்களுக்குத் தெரியும் என்று கூறினான். இதைக் கேட்ட அந்தப் பெரிய மனிதர் வெட்கி தலைகுனிந்தார். தன்னால், தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லையே. இவர்கள் இல்லாவிட்டால், நான் இறந்திருப்பேனே என்று எண்ணி வருந்தினார். இந்த நிகழ்ச்சியில் இருந்து மற்றவரை தரக்குறைவாக பேசுவதையும் மட்டம் தட்டி பேசுவதையும் அவர் நிறுத்திக்கொண்டார்.

இந்தப் பண்பைத்தான் நாம் இன்று பலரிடம் பார்க்கிறோம். மற்றவரை இழிவாகவும், தரக்குறைவாகவும் பேசுவது ஒரு நல்லப் பண்பாடு அல்ல. ஒரு மனிதன் உலகத்தில் உள்ள அனைத்து விஷயங் களையும் தெரிந்துகொள்ள இயலாது. ஒரு சில விஷயத்தில் நிபுணராக இருக்கலாம். அதற்காக, தனக்கு எல்லாம் தெரியும் என்று நினைத்துக் கொண்டு காலரை தூக்கிவிட்டு எண்ணுவது மடையினம். மற்றவரை புண் படுத்தாது பேசப் பழகிக் கொள்ள வேண்டும். இதற்கு சிறந்த வழி நல்ல செய்திகளை கேட்க வேண்டும். அதிகமாகப் பேசுவதை தவிர்க்க வேண்டும். ●



## தூய ஆவியாரின் பண்முகக் கொடைகள்

–Dr. அ. மதலைமுத்து, புதுவை–3.

**தந்தையின் திருவுளம்:** கிறிஸ்துவ குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினருக்கு அருளப்படும் தூய ஆவியாரின் அருள் கொடைகள், சில சமயம் சர்ச்சைக்குள்ளாகின்றன. ஆனால், இவை நம் அன்பான வானகத் தந்தை கருணை கூர்ந்து தம்மால் தேர்ந் தெடுக்கப்பட்ட பிள்ளைகளுக்கு இலவசமாக வழங்கியவையாகும். அருள்கொடைகள் பற்றி பல விளக்கங்கள் மற்றும் வரையறைகள் மறைநூலில் உள்ளன. அதனால், பெருவாரியான திருஅவையோர் அதே பார்வையைக் கொண்டுள்ளனர். ஆனால் ஆண்டவர் சிலருக்கு இந்த கொடைகளுக்கு மேல் அதிகமாக அல்லது வித்தியாசமாக அல்லது மேம்பட்ட வகையில் ஒன்றை கொடுத்திருக்கிறார். ஏனெனில், சாத்தானின் தீய தாக்கம் பலவகைப்பட்டதாகவும், மேலும் இன்று புதிய பரிமாணம் கொண்டதாகவும் உள்ளது. ஆகவே, திருமறையை பரப்புகின்ற பணியாளர்களின் பொறுப்பு இன்று புதிய சிக்கல்களுக்கும் சவால்களுக்கும் உள்ளாகியிருக்கிறது. இருப்பினும், அவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட சிறப்பு அருள்கொடைகளையும், அவர்கள் சாத்தானின் தாக்குதலுக்கு எதிரான போரில், மக்களின் ஆன்மாவை மீட்கவே பயன்படுத்த வேண்டுமென கடவுள் விரும்புகிறார்.

**ஆவியாரின் செயல்வண்ணம்:** தூய ஆவியாரின் “கனி” மற்றும் “ஒளி” யிலிருந்து (கலா.5:22; எபே.5:9) ஆவியானவர் அருளும் கொடைகளை (1கொரி.12:1-11; உரோ.12:6-8) பாகுப்படுத்திப் பார்த்து பொருள்கொள்வது, மற்றும் தெளிவு பெறுவது இன்றைய தேவையாகும். ஆவியாரின் கனிகள் என்பன ஆவியானவரை, தம் சிந்தனை, சொல் மற்றும் செயலில் அதாவது, தம்மில் வாழ்பவராகப் பெற்றிருக்கும் குருக்களுக்கும் அழைக்கப்பட்டோருக்கும் ஆவியானவர், “அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம்” (கலா:5:22) என்றெல்லாம் செயல்படுவார். நம் தன்னலமற்ற பணிகளில் நாம் மன நிறைவு கொள்ளும்போதுதான், இந்தக் கனிகள் நமக்குள் உயிர்ப்புடனும், நலமுடனும் தங்கும், இல்லையென்றால், வெறுமையும், விரக்தியுமே மிஞ்சும். கனிகள், மறைத்து வைக்கப்பட இல்லை, மாறாக இவை நம்மிலிருந்து உண்மையாக மற்றும் வெளிப்படையாக விசுவாசிகளுக்கு தென்பட வேண்டும்; தண்டின் மேல் வைக்கப்பட்ட விளக்காக, வெளிப்படையாக வாழவே அழைக்கப்பட்டிருக்கிறோம்.

**அழைத்தலின் முகவரி:** சாத்தான், மக்கள் மனதில், மற்றும் நல்லவர்கள் மீது சந்தேகம் மற்றும் வெறுப்பை விதைக்கிறான். இது மக்களின் பாவங்களுக்கு ஆணிவேராக அமைகிறது. இதை கையாளுவது நமது நெருக்கடியாகிறது. ஆகவே, ஆவியானவர் அருளும் கொடைகள் வித்தியாசமானவை மற்றும் தனித்தன்மை வாய்ந்தவையாகவும் உள்ளன என்பதை ஒருவர் அறிவது தேவையாகிறது. தமக்கு வழங்கப்பட்ட கொடைகளைப் பொறுத்து மறைபணியாளர்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் தனித் தன்மை மற்றும் பண்முகத் தன்மையோடு திகழ்வார்கள் என்று கூறப்பட்டுள்ளது. “நமக்கு அளிக்கப்பட்டுள்ள அருளுக்கேற்ப வெவ்வேறு அருள்கொடைகளைப் பெற்றுள்ளோம். இறைவாக் குரைக்கும் கொடையை நாம் பெற்றிருந்தால் நாம் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு ஏற்றவாறு அதை பயன்படுத்த வேண்டும்” (உரோ.12:6). “அருள்கொடைகள் பலவகையுண்டு; ஆனால் தூய ஆவியார் ஒருவரே. திருத்தொண்டுகளும் பலவகையுண்டு; ஆனால் ஆண்டவர் ஒருவரே. செயல்பாடுகள் பலவகையுண்டு; ஆனால் கடவுள் ஒருவரே…” (1கொரி.12:4-11). நமக்கு வழங்கப்பட்ட கொடைகள் என்பன உண்மையாக நம் அழைத்தலின் நோக்கத்தை சுட்டிக்காட்டும் முதல் முகவரியாகும். “நீங்கள் கடவுளுடைய பலவகை அருள்கொடை களின் சீரிய பொறுப்பாளர்கள். எனவே, உங்களுள் ஒவ்வொருவரும் தாம் பெற்றுக்கொண்ட அருள் கொடையைப் பயன்படுத்தி, ஒருவருக்கொருவர் பணிபுரியுங்கள்...” (1பேதுரு.4:10-11).

**அருள்கொடையின் வீச்சு:** அருளப்பட்ட கொடைகளும் அழைத்தலும் ஒன்றோடொன்று இணக்கமாக இருந்து செயல்படுவது என்பது வரையறுத்து கொடுக்கப்பட்ட ஒன்றாகும். இது திருத்தூதர் பணியைத் தாண்டிய இன்னொரு இறைப்பணிக்கு நம்மை வழிநடத்திச் செல்கிறது. இதுவும் திருத்தூதர் பணியின் நீட்சிப் பணிதான் என்று கொள்ளவேண்டும். “திருச்சபையிலும் கடவுள் முதலாவது திருத்தூதர் களையும், இரண்டாவது இறைவாக்கினர்களையும், .... பின்னர் வல்ல செயல்கள் செய்வோரையும், அதன்பின் பிணி தீர்க்கும் அருள்கொடை பெற்றவர்கள்... ஆகியோரையும் ஏற்படுத்தினார்” (1கொரி.12:28). மக்களுக்கு ஆன்ம, உணர்வு, உடல் மற்றும் உலகம் சார்ந்த பயணத் தில் நூறு தேவைகள் உள்ளன. ஆண்டவர் அனைத்து மக்களின் பிரச்சனைகளையும் பரிவோடு பார்க்கிறார். ஆவியானவரின் கொடை கள் ஒன்றை ஒன்று முந்திக்கொண்டு செயல்பட முனையும் சூழல்கள் எழ வாய்ப்புண்டு. ஆகவே, ஆவியானவர் அருளும் கொடைகள் ஏதோ மக்களுக்கு விடியலாகவும் விடுதலையாகவும் அமைய வேண்டும் என்று ஆண்டவர் விரும்புகிறார். செய்வோமா? ●

---



## மினவின மாதா - மூன்று முத்துக்கள்

-வெட்டிவயல் வளவன். முப்பையூர்

வளமார்வளன் பேழைமரி நல்லற மாண்பில்
வாய்க்கபெற்று நலமெல்லாம் காண்பார் நெஞ்சில்,
கலிலேயா கடல்சூழ்ந்த ஊர்கள் எல்லாம்
கலைபயிற்றெ ளிவூர்“நசரேத்” என்னும் நல்லூர்,
உலகுவக்க ஊர்மெச்ச வாழ்ந்தார் வென்றே!
உளமகிழ இறைவாக்கு உரைத்த வண்ணம்
வளன், மரியும் உடல்ஒன்றா நிலையில் வாழ்ந்து
குலம்சிறக்க அளவற்ற அன்பில் நின்றே!
வாழ்த்தொலியில் காபிரியேல் தூதர் தோன்றி
வாழ்கநீயிர் இறையருளால் “அருள்மிகப் பெற்றீர்”
வாழ்த்தினஅப் பொருளுரையால் கலங்க வாழ்க
“பெண்களுக்குள் ஆசீநீர் பெற்றாய்” என்றார்.
வாழும்வையம் உம்பேற்றால் மெசியா பே(ரா)றாம்!
களங்கியமனத் தாள்மரியாள் “நானோ ஆண்டார்
வாழ இடம்தரும் “அடிமையாள்ஆ கட்டும்” என்றாள்
வாழ்த்துமொழி யாவைகேட்டு இருந்தினாள் உள்ளம்!
கருத்தாங்கிய உமதுறவும் உம்மைப் போல
சக்காரியா எலிசபெத்தும் ஆறாம் திங்கள்
திருவாக்கு கேட்டநாள்,கரு சுமந்த அன்னை
திருப்பயணமாய் யூதேயாம லைவீடு சென்றார்!
கருவுற்ற இருஉறவும் ஒருவர் மாற்றி
கனிமொழியில் ஞாலமகன் கேட்ட வாழ்த்தால்
மரியாளின் வாழ்த்துளிரில் எலிசபெத் துள்ளும்
மதலையை எண்ணியபடி மகிழ்ந்தார் நன்றே!
அடிமையுறு வாழ்வுதனை உடைத்து வீழ்த்த
அல்லலுற்றார் மிடிமைதனை போக்கி, புத்தம்
விடியலுக்காய் புரட்சிமிகு வாழ்த்துப் பாடல்
பேறுடையார் போற்றுவண்ணம் நிலைத்து நிற்கும்!
தடிஎடுத்தார் எல்லாரும் தலைவர் ஆகார்
தரைமட்டம் எய்திடுவார், இறைவன் ஓர்நாள்!!
அடிப்படையாய் புரட்சிவித்தை வாழ்த்து மூலம்
அதிரடியாய் ஊன்றிவிட்டார்! புரட்சி வெல்லும்
“உள்ளத்தில் செருக்குடனே சிந்திப் போரை
சிதறடித்து வீழ்த்திடுவார்” அறநெறிப் புரட்சி
“வல்லடிமை செய்வோரை அரியணை நீக்கி
தூக்கியெறிவார்! தாழ்நிலையோர் உயர்வு செய்வார்”
சொல்லாமல் சொல்லியவண்ணம் சமூகப் புரட்சி
“ஈயாத செல்வர்க்கும் வீழ்ச்சி ஆங்கே
இல்லாமை பசித்தோரை நலன்கள் இட்டு
நிரப்புவார்”பொருள் ஆதாரப் புரட்சி என்னே”

**"குடும்பங்கள், மனித முன்னேற்றத்தின் பள்ளிகளாக":** மனித முன்னேற்றத்திற்குத் தேவையான பாடங்களைச் சொல்லித்தரும் ஒரு பள்ளியாக குடும்பங்கள் விளங்கவேண்டும் என்ற கருத்தை மையப்படுத்தி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஆகஸ்ட் மாதத்திற்குரிய தன் செபக் கருத்தை, ஆகஸ்ட் 1, இவ்வியாழனன்று வெளியிட்டார். குடும்பத்தைக் குறித்து திருத்தந்தை வெளியிட்டுள்ள இக்கருத்தை, இயேசு சபையினர் நடத்தும் செபத்தின் திருத்தூதுப் பணிக்குழு, குடும்பத்தில் நிகழும் ஒரு காட்சியாக, The Pope Video என்ற காணொளியில் வடிவமைத்துள்ளது. இக்காணொளியில், தன் தாயிடம் எதையோ சொல்ல வரும் ஓர் இளம் பெண்ணிடம் அக்கறை காட்டாமல், அந்தத் தாய், தொலைக்காட்சியில் ஒரு நிகழ்ச்சியைக் காண்பதில் ஆர்வம் கொண்டிருப்பதுபோல் முதல் காட்சியும், இரண்டாவது காட்சியில், அதே இளம் பெண், தன் தந்தையைத் தேடிச் செல்லும்போது, அவர் தன் வேலையில் மூழ்கியிருப்பதுபோலும் காட்டப்பட்டுள்ளது.

தொடர்புகள் அற்ற இந்த நிலைக்கு ஒரு மாற்றாக, இந்தக் காணொளியின் இறுதியில், தந்தை, தாய் மற்றும் மகள் மூவரும், மேசையில் அமர்ந்து உணவு உண்பதற்கு முன், இறைவேண்டல் செய்வதுபோல் ஒரு காட்சி அமைக்கப்பட்டுள்ளது. இக்காட்சிகள் இடம் பெறும்போது, பின்னணியில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஸ்பானிய மொழியில் தன் கருத்துக்களைக் கூறுகிறார்.

நாம் எத்தகைய உலகை எதிர்காலத்திற்கு விட்டுச்செல்ல விழைகிறோம் என்ற கேள்வியுடன் திருத்தந்தை தன் செய்தியைத் துவக்கி, குடும்பங்கள் நிறைந்த ஓர் உலகை நாம் விட்டுச் செல்வோமாக என்ற விண்ணப்பத்தை எழுப்புகிறார். நம் குடும்பங்கள், எதிர்காலத்தைப்பற்றி சொல்லித்தரும் பள்ளிகள், நமது சுதந்திரம் வழங்கும் தலங்கள், மற்றும் மனிதத்தின் மையங்கள் என்பதால், நமது குடும்பங்களைப் பேணிக் காப்போமாக என்ற கருத்தை திருத்தந்தை வலியுறுத்தியுள்ளார்.

குடும்பங்களில் தனிப்பட்ட மற்றும் குடும்ப செபங்களுக்கு தனியொரு இடம் ஒதுக்குவோம் என்று எடுத்துரைக்கும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நமது குடும்பங்கள், செபம் மற்றும் அன்பின் வழியே, உண்மையான மனித முன்னேற்றத்தின் பள்ளிகளாக விளங்க நாம் செபிப்போமாக என்ற சொற்களில், தன் ஆகஸ்ட் மாத செபக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

**அருள்சகோதரர் ஒருவருக்கு ஆஸ்திரேலியாவின் உயரிய விருது:** ஆஸ்திரேலிய பூர்வீக இன மக்களின் மொழிக்கு ஆற்றிய சிறப்புச் சேவைக்கென ஆஸ்திரேலிய அரசின் உயரிய விருதொன்றை பெற்றுள்ளார், அந்நாட்டு துறவு சபை அருள்சகோதரர் ஒருவர். ஆஸ்திரேலியாவின் பூர்வீக இனங்களுள் ஒன்றான Gumbaynggirr எனத் தலைவர்களின் விண்ணபத்தின் பேரில், அம்மொழியில் அகராதி ஒன்றை எழுதி, அம்மொழியை மற்றவர்களுக்கும் கற்பித்துக் கொடுப்பதில் ஆர்வம் காட்டி உழைத்த கிறிஸ்தவ அருள் சகோதரர்கள் துறவு சபையின், அருள் சகோதரர் Steve Morelli அவர்களுக்கு, "Patji-Dawes" விருதை வழங்கி கௌரவித்துள்ளது. ஆஸ்திரேலிய அரசு. ஆங்கிலம் தவிர ஏனைய மொழிகளைக் கற்பிப்பதில் சிறப்புப் பங்காற்றியவர்களுக்கு வழங்கப்படும் மிக முக்கிய விருதாகவும் இது. பூர்வீக குடிமக்கள் மொழிகளின் அனைத்துலக ஆண்டு என்று, 2019ம் ஆண்டை ஐக்கிய நாடுகள் நிறுவனம் சிறப்பித்து வருமே வேளை இவ்விருதைப் பெறுவது ஒரு முக்கிய நிகழ்வாக நோக்கப்படுகிறது. ஆஸ்திரேலிய பூர்வீக குடிமக்களின் 250 மொழிகளுள், தற்போது 120 மட்டுமே பேச்சு மொழியாக இருப்பதாகவும், அதிலும் 90 விழுக்காட்டு மொழிகள் அழியும் நிலையில் இருப்பதாகவும், செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. (Fides)

---

**உப்பளம், தூய சவேரியார் மேய்ப்புப்பணி மையத்தில், குணமளிக்கும் நற்செய்தி ஆராதனைக் கூட்டம்**

நாள் : **17-08-2019 (சனிக்கிழமை)**

நேரம்: காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை

இடம்: **புனித சவேரியார் மேய்ப்புப் பணி & கலைத்தொடர்பு நிலையம்.**

(புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய வளாகம்) நேத்தாஜி நகர்-1, உப்பளம், புதுச்சேரி-1)

**நடத்துபவர்:** திருமதி. **கிறிஸ்டினா மோகினி** (மேனாள் திரைப்புகழ் நடிகை, அமெரிக்கா)

அருட்தந்தை **ஆன்ரு மிஜெல்லா** பங்குத்தந்தை, முன்னூர்.

(செயலர், நற்செய்தி அறிவிப்புப் பணிக்குழு, புதுவை)

**அனைவரும் கலந்துகொண்டு இறை ஆசீர் பெற அழைக்கின்றோம்.**

இவண், அருட்தந்தை **பிலோ**

இயக்குநர், மற்றும் மைய செப தயாரிப்பு குழுவினர்

புனித சவேரியார் மேய்ப்புப்பணி & கலைத்தொடர்பு நிலையம், புதுச்சேரி.

**தொடர்புக்கு:** 9443244787 / 9750365723 / 9842333363

## மணமகள் தேவை

கத்தோலிக்க கிறிஸ்துவர், படிப்பு: DCE (Diploma in Safety Engeering (வயது 29); Gulf-ல் பணிபுரியும் மணமகனுக்கு Degree முடித்து பணிபுரியும் நடுத்தர குடும்பத்தை சேர்ந்த குணமுள்ள மணமகள் தேவை.

தொடர்புக்கு: 87 54 58 89 56 / 90 80 50 54 95

## தவறுகளுக்கு வருந்துகிறோம்

28-07-2019 தேதியிட்ட சர்வ வியாபியில் (பக்கம் 6) குருக்கள் மரியன்னை இயக்க தொடக்க விழாவில் பல்கேரியா நாட்டு இந்திய தூதுவர் கிறிஸ்டினா ரோஸ் கலந்து கொண்டார் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. அவர்களின் பெயர் கிறிஸ்டினா ரோஸ் (எ) மிலேனா நிக்கோலோவா என்றும், இந்திய தூதுவர் (பொறுப்பு) ல் இருந்த தூதரக அதிகாரி (diplomat) என்று சொல்லப்பட்டிருக்க வேண்டும்.

## விண்ணக வாழ்வின் 15-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்ணில்: 18-4-1936



விண்ணில்: 27-08-2004

**திரு. மிஷேல் எம்மானுவேல்**

**"உமது மீட்பால் வரும் வாழ்வை எனக்கருளும்." (சங்.50:12)**

**திருப்பலி: 27-8-2019 செவ்வாய் அன்று காலை 6.15 மணிக்கு புதுவை புனித ஜென்ம இராக்கினி அன்னை பேராலயத்திலும், காலை 6.30 மணிக்கு, காரைக்கால் புனித தேற்றரவு அன்னை ஆலயத்திலும் திருப்பலி நிறைவேற்றப்படும்.**

**பிரிவால் துயருறும்**
**மனைவி, மகள், மகன்கள்,**
**மருமகன், மருமகள்கள்,**
**பேரப்பிள்ளைகள் மற்றும்**
**உறவினர்கள்.**
**புதுவை**



# 14-வது ஆண்டு நினைவு அஞ்சலி

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில்
விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"
(யோவான் 11:25)

"வாழ்நாளில் உம்மை நேசித்த நாங்கள்,
மரணத்திலும் உம்மை மறவோம்."

அன்னாரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக
அரியாங்குப்பம்,
புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில்
25-8-2019 ஞாயிறு மாலை 5.30 மணிக்கு
திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.
இதைக் காணும் தாங்கள் அன்னாரின் ஆன்ம
இளைப்பாற்றிக்காக
வேண்டுமாறு அன்புடன் கேட்டுக்
கொள்கிறோம்.

## ஆரோக்கியம் தனராஜா

மண்ணில்:26-01-1937
விண்ணில்:25-8-2005

பிரிவால் துயருறும்
**மனைவி,**
**மகன்கள், மருமகள்கள்,**
**மகள், மருமகன்,**
**பேரப்பிள்ளைகள்**
**மற்றும் சகோதரர்கள்,**
**சகோதரிகள்.**

---



**திரு.M. தேவசகாயம், Ex.Army**

**மலர்ந்தது : 16-09-1938**
**மறைந்தது : 12-08-2018**

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோவான். 11:25)

இரக்கம் மிகுந்த இயேசுவே! இறைவா உமது அன்பு மகனாக எங்கள் குடும்பத்தின் நேசமுள்ள தலைவ ராகவும், ஒளியாகவும், பாசமிக்க வராகவும் எங்களை நேசித்து, எங்களுடன் வாழ்ந்து உம் திருப்பாதம் அடைந்த உம் அடியார் அவர்களுக்கு முடிவில்லா விண்ணக வாழ்வையும் நித்திய ஒளியையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம். ஆமென்

பிரிவால் துயருறும்
அன்பு மனைவி
மகன்கள், மகள்கள், மருமகள்கள்,
மருமகன்கள், பேரப்பிள்ளைகள்.
மற்றும் குடும்பத்தினர்.

12–8–2019 திங்கள் காலை 6.00 மணிக்கு அணையேறி, புனித மேரி மக்தலனாள் ஆலயத்தில் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.

---

## 42-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 23-11-1905



மறைவு: 14-08-1977

**அடைக்கலமரி அம்மாள்**

அன்னாரின் 42 ஆம் ஆண்டு நினைவாக 14-8-2019 வியாழக்கிழமை காலை 6.15 மணிக்கு புதுவை, ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்தில் நிறைவேற்றப் படும் துக்கப்பாடல் திருப்பலியில் அவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அம்மாச்சியை இழந்து துயருறும்
பேத்தி: மரி எமிலி சுபாஷினி
மற்றும்: M. மரிய சூசை, B.E.
Dy.Secretary/Director of Industries & Commerce (Rtd). Pondicherry
கொள்ளுப்பேரப்பிள்ளைகள்.
25, நீடராஜப்பய்யர் வீதி, புதுவை-1.
Ph: 2338168 / 98431 38168

**திருத்தந்தை: உண்மையான செல்வம் விண்ணகத்தில் உள்ளது:** செல்வங்கள், உண்மையான செல்வக் குவியலிலிருந்து நம்மை திசை திருப்பும் மற்றும் இதயத்தைக் கட்டுப்படுத்தும் என்று, இஞ்ஞாயிறு நண்பகல் மூவேளை செப உரையில் எச்சரித்தார் திருத்தந்தை பிரான்சிஸ். இஞ்ஞாயிறு நண்பகலில், வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு, அறிவற்ற செல்வன் பற்றிய ஞாயிறு நற்செய்தி வாசகத்தை (லூக்.12:13-21) மையப்படுத்தி, மூவேளை செப உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்த அழகான நற்செய்தி பகுதியை வாசிக்குமாறு விசுவாசிகளுக்கு அழைப்பு விடுத்தார். லூக்கா நற்செய்தியில் கொடுக்கப்பட்டுள்ள, அறிவற்ற செல்வன் உவமை பற்றி விளக்கிய திருத்தந்தை, எல்லாவற்றையும் கொண்டிருக்க வேண்டும் என்ற பேராசையை விலக்கி நடக்குமாறு கேட்டுக்கொண்டார். அறிவற்ற செல்வன், தனக்கு நல்ல எதிர்காலம் உள்ளதால் மகிழ்வாக இருப்பதாக நம்பினான், தான் சேமித்து வைத்த பொருள்களில் பாதுகாப்பையும் உணர்ந்தான் என்றுரைத்த திருத்தந்தை, செல்வனின் திட்டங்களுக்கும், அவனுக்காக கடவுள் வைத்திருக்கும் வாக்குறுதிக்கும் இடையே நிலவும் முரண்பாடு வெளிப்படும்போது, இந்தக் கதை உயிரூட்டம் பெறுகிறது என்றார். அந்த செல்வன் அறிவற்றவன், ஏனெனில், வாழ்வில் கடவுளைப் புறக்கணித்தான், கடவுளை தன் வாழ்வில் ஒரு பொருட்டாகக் கருதவில்லை என்றுரைத்த திருத்தந்தை, நாம் எதைப் பற்றி சிந்திக்க வேண்டுமென்பதற்கு, இந்த உவமை ஓர் எச்சரிக்கையாக உள்ளது என்று கூறினார். உலகப் பொருள்கள் நம் வாழ்வுக்கு அவசியமானவைதான், ஆனால் அவையே நம் வாழ்வின் இறுதி இலக்கை எட்டுவதற்கான கருவிகளாக செல்வங்கள், உண்மையான செல்வக்குவியலிலிருந்து நம்மை திசை திருப்பும் மற்றும் இதயத்தைக் கட்டுப்படுத்தும், உண்மையான செல்வக்குவியல், விண்ணகத்தில் உள்ளது என்பதை உணர்வதற்கு, இயேசு இன்று நமக்கு அழைப்பு விடுக்கிறார் எனக் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். உலகப் பொருள்களை அளவுக்கதிகமாகத் தேடுவது கவலை, பகைமை, சாக்குப்போக்கு சொல்லுதல், போர் போன்றவைக்கு இட்டுச்செல்லும், இன்று உலகில் பேராசையால் எத்தனை போர்கள் என்றும், இஞ்ஞாயிறு நண்பகல் மூவேளை செப உரையில் திருத்தந்தை கூறினார். *- வத்.செய்தி*

**கியூப இளையோரிடம் திருத்தந்தை-மறைப்பணி சீடர்களாக மாறுங்கள்:** அன்னை மரியாவின் எடுத்துக்காட்டைப் பின்பற்றி, எப்போதும் முன்னோக்கிச் செல்லுங்கள் என்று, கியூபா நாட்டு இளையோரை ஊக்கப்படுத்தியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். "இதோ நான் ஆண்டவரின் அடிமை; உம்சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்ற தலைப்பில், கரிபியன் தீவு நாடாகிய கியூபாவில், ஆகஸ்ட் 1, வியாழனன்று இரண்டாவது தேசிய இளையோர் நாள் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வுக்குச் செய்தி அனுப்பியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஆண்டவரின் நம்பிக்கையுள்ள அடிமையாக வாழ்ந்த அன்னை மரியாவை, உறுதியாகப் பற்றிக்கொண்டு இயேசு கிறிஸ்துவை சந்தித்ததில் பிறக்கும் மகிழ்வை, தொடர்ந்து அனுபவிக்குமாறு அழைப்பு விடுத்துள்ளார். மரியாவைப் போன்று, இயேசுவின் உயிர்ப்புக்குச் சாட்சிகளாகவும், மறைப்பணி சீடர்களாக மாறுவதற்குத் தங்களை மனமுவந்து அர்ப்பணிக்கவும், கியூபா இளையோரைக் கேட்டுக்கொண்ட திருத்தந்தை இவர்கள் வழியாக, மேலும் ஏராளமான இளையோர், ஆண்டவர் இயேசுவின் இருப்பைக் கண்டுகொள்ளவும், அவரின் அழைப்புக்குச் செவிமடுத்து, அவரின் நட்பில் வாழவும், நம்பிக்கை மற்றும் இரக்கத்தில் வேரூன்றப்பட்ட வாழ்வை வாழவும் இயலும் என்று கூறியுள்ளார். கியூபாவின் El Cobre பிறரன்பு அன்னை மரியாவிடம், அந்நாட்டு இளையோர்க்காகச் செபிப்பதாகவும், தனது செய்தியை நிறைவு செய்துள்ளார். திருப்பீட செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள், திருத்தந்தையின் பெயரால் இச்செய்தியை அனுப்பியுள்ளார்.

**இந்தோனேசிய மறைப்பணி மாநாட்டிற்கு திருத்தந்தை செய்தி:** தன்னிலே மறைப்பணியாளராக இருக்கின்ற ஒரு கிறிஸ்தவர், தூய ஆவியாரால் உந்தப்பட்டு தனது திருமுழுக்கு வாழ்வை, சமுதாயத்தில் புளிக்காரமாக வாழ்ந்து, இயேசுவின் நற்செய்தியை அறிவிக்கின்றார் என்று, ஒரு மறைப்பணி மாநாட்டிற்கு அனுப்பியுள்ள செய்தியில் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஆகஸ்ட் 1, இவ்வியாழனன்று இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவின் Mercure மையத்தில் தொடங்கியுள்ள, தேசிய மறைப்பணி மாநாட்டிற்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அனுப்பியுள்ள காணொளிச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார். நாம் திருமுழுக்கு பெற்றபோது, நம் சொத்தாகிய தூய ஆவியாரையும், நமக்குள்ளிருக்கும் இயேசுவின் நற்செய்தியையும் பெற்றுக் கொண்டோம் என்பதை, இம்மாநாட்டில் கலந்துகொள்ளும் கத்தோலிக்கருக்கு நினைவுபடுத்தியுள்ள திருத்தந்தை, திருமுழுக்குப் பெற்றுள்ளவர்கள், அனுப்பப்பட்டுள்ளவர்கள் ஆகிய இரு பதங்களை மையப்படுத்திப் பேசியுள்ளார். கிறிஸ்தவர், இயேசுவின் நற்செய்தியை அறிவிப்பதில், திருமுழுக்கை, தனது தனிப்பட்ட வாழ்வில் மட்டுமின்றி, சமதாயத்தல் புளிக்காரமாகவும், எவ்வாறு வாழ்கிறார் என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கிறிஸ்தவர் முன்னோக்கிச் செல்கையில், அவர் அனுப்பப்பட்டவராகச் செல்கிறார், இதற்கு உந்துசக்தி தூய ஆவியாரே என்று உணருமாறு வலியுறுத்திய திருத்தந்தை, திருமுழுக்குப் பெற்றவர்கள், மற்றும் அனுப்பப்பட்டவர்கள் என்ற உணர்வில், துணிச்சலுடன் எப்போதும் முன்னோக்கிச் செல்லுமாறு மாநாட்டினரை ஊக்கப்படுத்தியுள்ளார். "திருமுழுக்கு வழங்கப்பட்டு, அனுப்பப்பட்டவர்கள்" என்ற தலைப்பில், இந்தோனேசிய கத்தோலிக்கத் திருஅவை ஏற்பாடு செய்துள்ள இம்மாநாடு ஆகஸ்ட் 4-இல் நிறைவடைந்தது. *- வத்.செய்தி*

**குடும்ப வாழ்வில் தாத்தா, பாட்டிகளின் முக்கியத்துவம்:** குடும்ப வாழ்வில், விசுவாசத்தையும், மனித சமுதாயத்தின் மரபுகளையும் அறிவிப்பதில் தாத்தா, பாட்டிகள் முக்கிய பங்காற்றுகின்றனர் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தனது இன்ஸ்டகிராம் ஊடகத்தில் பதிவு செய்துள்ளார். அன்னை மரியாவின் பெற்றோரான, புனிதர்கள் சுவக்கீன், அன்னம்மாள் திருவிழா சிறப்பிக்கப்பட்ட கடந்த ஜூலை 26, வெள்ளி மாலையில், திருத்தந்தை தனது இன்ஸ்டகிராமை தாத்தா, பாட்டிகளுக்கு அர்ப்பணித்துள்ளார். "இன்று, பல நாடுகளில் தாத்தா, பாட்டிகளின் திருவிழா கொண்டாடப்படுகின்றது. அவர்கள், குடும்ப வாழ்வில், மனித சமுதாயத்தின் மரபுகளையும், ஒவ்வொரு சமுதாயத்திற்கும் இன்றியமையாததாகிய விசுவாசத்தையும் அறிவிப்பதில் எவ்வளவு முக்கியமானவர்கள்" என்று, பதிவு செய்துள்ளார், திருத்தந்தை, பிரான்சிஸ்.

**Published and Printed by** Rev.Fr.C.ANTONI ROCHE **on behalf of Most Rev.** Dr. A. ANANDARAYAR, D.D.,D.C.L., Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001. Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: Rev.Fr.C.ANTONI ROCHE.
Manager: Very Rev. Msgr. A. Arulanandam.